Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை (24.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 175

## வடக்கு தமிழர் பிரச்சினைகளுக்கு

# படிப்படியாகவே தீர்வு காணப்படும்





(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் படிப்படியாகவே தீர்வு காணப்படும் என்றும், தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பயம், பீதி, சந்தேகம் என்பவற்றை நீக்குவதன் மூலமே இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தமுடியும்.

தமிழ் மக்களிடத்திலிருக்கும் பயம், பீதி, சந்தேகம் என்பவற்றை நீக்கவேண்டுமாயின் அவர்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதை நாம் உணர்வோம் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வலி.வடக்கு, வலி.கிழக்குப் பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதியில் பொதுமக்களது காணிகள் சிலவற்றை விடுவித்து அவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் வளலாயில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கம் என்ற வகையிலேயே நாங்கள் மக்களுடைய எல்லாப் பிரச்சினைகளையும் படிப்படியாக தீர்த்துவைத்து வருகிறோம். குறிப்பாக மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் பிரச்சினைகளை நாம் முன்னுரிமைப்படுத்தி தீர்த்துவைக்க முற்பட்டுள்ளோம். இப்படியான வேலைகள் ஆரம்பிக்கப்படும் போது சில குறைபாடுகள் இருக்கலாம்.

ஆனால் குறைபாடுகள் இருந்தாலும் 19 ஆம் பக்கம் பார்க்க

## காணி விடுவிப்பு அடுத்த கட்டம் ஏப்ரல் மாதம்

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் மாத முடிவுக்குள் மிகுதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

வளலாயில் நேற்று படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் 400 ஏக்கர் காணிகளை உரிய மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாநகர ஊழியர்கள் நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரத்திற்கு எதிராக யாழ். மாநகர சபை சுகாதார ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுக் காலை 5.00 மணிமுதல் இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபையினால் யாழ். பெரிய கடைப்பகுதியில் உள்ள புடவை விற்பனை நிலையம் சில

19 ஆம் பக்கம் பார்க்க

## செயலக வாயிலில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போன உறவுகளை மீட்டுத்தரக்கோரியும், உள்ளக விசாரணை வேண்டாம் சர்வதேச விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியும் காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று யாழில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து வருகை

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் அத்துமீறல் சென்னையில் இன்று பேச்சு

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை இன்று சென்னையில் நடைபெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக இலங்கை மீனவப்பிரதிநிதிகள் 15 பேர் நேற்று சென்னைக்கு சென்றுள்ளனர். இப்பேச்சுவார்த்தையில் இந்தியப் பிரதிநிதிகள் 25 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன், மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை ஜனாதிபதியிடமும் இலங்கை நாடாளுமன்றத்திலும் இந்தியப் பிரதமர் தெளிவாகப் பேசி இருக்கிறார். இப்பிரச்சினை தொடர்பில் நிச்சயமாக விரைவில் சுமுகமான தீர்வு எட்டப்படும்.

இப்பிரச்சினை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேரடியாக கவனம் செலுத்துகிறார் என்று தெரிவித்தார்.

## மகிந்த ஆட்சிக்கும் மைத்திரி அரசுக்கும் வித்தியாசம் இல்லை



(கொழும்பு)

தற்போதைய புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லையென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் தொடர்பில் ஜே.வி.பி. எதிர்ப்பை வெளியிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதே கடந்த அரசாங்கம் மீதான முதன்மையான குற்றச்சாட்டாக இருந்ததாகவும், தற்போது என்ன நிகழ்ந்தேறி இருக்கிறது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியை சீர்குலைத்ததோடு, அவர்களை சிறைக்கனுப்ப முயற்சித்த எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு தற்போது அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த பலர் மீது எதனோல் இறக்குமதி மோசடி, போதைப்பொருள் கடத்தல் மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் கோடிக்கணக்கான பண வைப்பீடு உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்தில் அவர்களும் பங்காளிகளாக இருக்கின்ற நிலையில், அவர்கள் மீது எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் எதிர்பார்பிற்கும் 19 ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுடன் விக்கி கைகுலுக்காதது ஏன்?



(யாழ்ப்பாணம்)

விடுவிக்கப்பட்ட காணிகளை கையளிக்கும் நிகழ்வுக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் உரையாடுவதைத் தவிர்த்துக்கொண்டார்.

ஜனாதிபதியுடன் வருகை தந்திருந்த பிரதமர் ரணிலை முதலமைச்சர் கண்டுகொள்ளவோ வரவேற்கவோ இல்லை. பரஸ்பரம் கைகுலுக்கல்கள் 19 ஆம் பக்கம் பார்க்க

கழிவு எண்ணெய் கசிவு விவகாரம்

**நிபுணர் குழுவின் அறிக்கை உண்மையா? கிளம்புகிறது கண்டனம்.** பக்கம் 19


# மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி; கிளிநொச்சியில் மும்முரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் புதிய அலுவலக கட்டடம், நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதார, கல்வி, சுய தொழில் செய்வதற்காக உதவிகளை வழங்கிவரும் இந்த அமைப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அமைப்பு உதவி செய்து வருகின்றது.

சமூக ஆர்வலர்கள் இணைந்து இந்த அமைப்பை செயற்படுத்தி வருகின்றனர். இவ் அமைப்பின் செயற்பாடுகளை முன்னேற்றும் வகையில் வாடகை எதுவுமற்ற வகையில் தனது கட்டடமொன்றை கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை சி.சசிகலா என்பவர் வழங்கினார். இந்தக் கட்ட டத்திலேயே இவ் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



திறப்பு விழா நிகழ்வில் 11 மாற்றுத்திறனாளிகளுக்கு மெத்தைகள், உதவி உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. பல சமூக ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# குடி நீரைப் பெறுவதற்கு ஏழாலை மக்கள் அச்சம்

வலிகாமம் ஏழாலைப் பகுதியில் பாடசாலைக் குடிநீர்த் தாங்கியில் நஞ்சேற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

வலிகாமம் பகுதி மக்களுக்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர்த் தாங்கிகளில் நீரைப் பெற்றுக் கொள்ளும் ஏழாலை பகுதி மக்களே இவ்வாறு பீதியுடன் குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றனர். தாம் பெற்றுக் கொள்ளும் குடிநீர்த் தாங்கியிலும் ஏதேனும் நஞ்சுத் திரவம் கலந்திருக்கின்றதோ என தினமும் அச்சத்துடனே நீரைப் பெற்றுக் கொள்வதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். பாடசாலை நீர் தொட்டியில் நஞ்சேற்றியவர்கள் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (66)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவு

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கரவெட்டி மேற்குப் பகுதியைச் சேர்ந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. முதற் கட்டமாக ரூபா 10,000 வழங்கப்பட்டது. இதன் இரண்டாம் கட்டமாக மீண்டும் 10,000 வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி தெரிவித்தார். குறித்த நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ளாத கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவம் சிவசோதி, இராசன் கிருஸ்ணராசா, மாணிக்கம் கண்ணம்மா, தருமசீலன் சிறிமா, கருவல் சண்முகம், விமலதாசன் புஸ்பராணி, ஆகியோர் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (18)

## வலுவிழந்தவரின் மூன்று சக்கரவண்டியை முட்டி மோதியது துவிச்சக்கர வண்டி

(திருநெல்வேலி)

வலுவிழந்த ஒருவர் தனது மூன்று சக்கர வண்டியில் வீதியால் வந்து கொண்டிருந்தபோது பின்புறமாக வந்த சைக்கிளோட்டி ஒருவர் அவர் மீது மோதிக் கொண்டதினால் வலுவிழந்த நபர் தனது வண்டியுடன் அருகிலிருந்து ஆழமான வாய்க்காலுக்குள் தலைப்புறமாக விழுந்துள்ளார்.

அண்மையில் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் காலை 9.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த கறுப்புசாமி நாகராஜன் (வயது - 45) என்பவரே விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தவராவார்.

திருநெல்வேலி வலுவிழந்தோர் புனர்வாழ்வுக் கழகத்தில் இணைந்து அங்கு தொழில் பார்த்து வந்த இவர், வீதியில் கூடியவர்களினால் வாய்க்காலுக்குள்ளிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது சிகிச்சை முடிந்து இவர் வீடு திரும்பியுள்ளார்.

இவரை மோதித் தள்ளிய சைக்கிள் தாரி ஏ[illegible] சாக்குப் போக்கு சொல்லி அவ்விடத்தைவிட்டு மெல்ல அகன்று[illegible]ட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் இவ்விபத்து சம்பவம் பற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (137)

# பூட்டுத் திருத்த வந்தவர் துவிச்சக்கரவண்டியை இழந்தார்

(திருநெல்வேலி)

பூட்டுத் திருத்துவதற்காக கடையொன்றுக்கு வந்த நபர் ஒருவர் தன்னிடமிருந்த பணத்தை மாத்திரமல்ல அவரிடமிருந்த துவிச்சக்கர வண்டியையும் இழந்தார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பூட்டுக்கள் திருத்தும் கடையொன்றுக்கு சில நாட்களுக்கு முன்னர் ஒருவர் வந்தார். காலையில் வந்த அவர் கடை திறக்கப்படாமையினால் கடைக்கு முன்னால் காவல் நின்றார். அப்போது அப்பக்கமாக வந்த ஒருவர், தனது மகனின் கடைதான் அது எனவும், சிறிது நேரத்தில் மகன் வந்து கடையைத் திறப்பார் எனவும் கூறி அவரிடமிருந்த பூட்டை வாங்கிப் பரிசோதித்தார்.

பூட்டு சரியில்லை எனத் தெரிவித்த அவர் புதிய பூட்டு ஒன்றைத் தான் வாங்கி வருவதாகக் கூறி அவரிடமிருந்து 500 ரூபா பணத்தையும் அவரது சைக்கிளையும் பெற்றுக் கொண்டு சென்றார்.

சிறிது நேரத்தில் கடையைத் திறப்பதற்காக வந்த கடை உரிமையாளரான இளைஞரிடம் நடந்த சம்பவத்தைப் பூட்டைத் திருத்த வந்தவர் தெரிவித்தபோது, தனக்குத் தகப்பன் இல்லையெனவும் அவர் ஏமாற்றப்பட்டிருப்பதையும் கூறினார்.

அதிர்ச்சியும் விரக்தியும் அடைந்த அந்நபர் மிகுந்த சோகத்துடன் கால்நடையாகவே தனது வீட்டை நோக்கிச் சென்றார். (137)

## பிணையில் செல்ல அனுமதி

(கரணவாய்)

கரவெட்டியில் பெண்ணொருவரை ஏமாற்றித் திருமணம் செய்ய முற்பட்ட நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பெண்ணொருவரை திருமணம் செய்வதாகக் கூறி அவரிடமிருந்து 12 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட அவரை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த சனிக்கிழமை ஆஜர் செய்தனர். தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட குறித்த நபர் பெண்ணிடமிருந்து பெற்றுக் கொண்ட பணத்தில் 6 இலட்சம் ரூபாவை உடனடியாக கொடுப்பதாகவும் மீதிப் பணமான 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவினை எதிர்வரும் 27ஆம் திகதி கொடுப்பதாகவும் நீதி மன்றில் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை நீதிபதி குற்றவாளியை இரு நபர்களின் சரீரப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்வதற்கு உத்தரவிட்டார். (18)

## யாழ்ப்பாணத்தில் குமரிவேந்தனின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை குமரித்தமிழ்ப் பணி மன்றத்தின் நிறுவுனர் நா.வை.குமரிவேந்தன் எழுதிய, உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ், தமிழர் இலக்கிய இலக்கணம்(ஓர் அறிமுகம்), தமிழர் மெய்யியல் கோட்பாடு ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி,ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் முதன்மை விருந்தினர்களாக இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராசன், திருவாட்டி சாந்தி நடராசன், வடமாகாண சபை கல்வி அமைச்சர் த. குருகுலராசா, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரன், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வவுனியாத் தமிழ்ச்சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நூலகச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை, தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் நி.யோண் குயின்ரசு, யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தாவீது சதானந்தன் சொலமன் அடிகளார், நெடுந்தீவு ஊர் மன்றத்தலைவர் புலவர் அ.வெ. அரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையினை கரைச்சி பிரதேசசபைத் தலைவர் நா.வை. குகராசா நிகழ்த்துவார். தலைமையுரை, வாழ்த்துரைகளைத் தொடர்ந்து நூல்களின் வெளியீட்டில் முதற்படிகள் பெறுதல் இடம்பெறும். நூல்களின் வெளியீட்டுரைகளையும் மதிப்பீட்டுரைகளையும் விழாவில் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொள்ளும் தமிழறிஞர்கள் நிகழ்த்துவர். விருந்தினர் உரையினைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், பாடசாலைகளின் 96 நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்பும்

## நூல் வெளியீடு

(நாவற்குழி)

"நேர்கோடுகள் என்றும் வளைவதில்லை" எனும் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

உடுப்பிட்டி, நாவலடி இமையாணன் மேற்கு சன சமூகத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர் தெரிவும் இடம்பெறவுள்ளதால் இதன் அங்கத்தவர்கள் நாவலர் சனசமூக நிலைய மாணவர் மன்ற மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (18)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM H.30 | நீங்காத நினைவுகள் |

# பூர்த்தி செய்யப்படாத பதவி வெற்றிடங்களால் பாதிப்படையும் கல்விச் செயற்பாடுகள்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கல்வி நிர்வாகத்தில் காலியாகும் பதவி வெற்றிடங்கள் உரிய வேளையில் பூர்த்தி செய்யப்படுவது இல்லை. இதனால் கல்விச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படுகின்றது. வடமாகாண கல்விப் பணிப்பாளர் பதவி காலியாக உள்ளது. பல பாடசாலைகளில் அதிபர் பதவிகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இவற்றை உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ஆ.இராஜேந்திரன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள போதிலும் குறித்த பதவி வெற்றிடமாக உள்ளது. யாழ்.கல்வி வலயத்தில் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், கோண்டாவில் மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபர் பதவிகள் நீண்ட காலமாக காலியாகவுள்ளன.

கல்வி முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக உள்ளவர்களின் பதவி வெற்றிடம் உரிய முறையில் நிரப்பப்படாமல் காலியாக இருப்பது கல்விச் செயற்பாடுகளில் எதிர்பாராத பாதிப்புக்களையும் ப்க்க விளைவுகளையும் ஏற்படுத்தும்.

பதவி ஆளணியில் உள்ளவர்கள் ஓய்வு பெறுவதோ இடமாற்றப்படுவதோ சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தெரியாமல் இல்லை. அவர்களினால் காலியாகும் இடங்களுக்கு உரிய முறையில் விண்ணப்பங்களை கோரி வெளிப்படைத்தன்மையோடு உரிய பதவி நிலையை பூர்த்தி செய்ய வேண்டும். இதனையே சுற்றறிக்கை வலியுறுத்துகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (63)

# யானைகளின் தொல்லைகளால் அவதிப்படும் வன்னேரிக்குள மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லைகளை எதிர்கொண்டிருப்பதாக இக்கிராம மக்கள் கரைச்சி பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த ஒருமாத காலமாகவே யானைகளின் தொல்லைகளை எதிர்கொண்டிருப்பதாகவும் யானைகளினால் தென்னை, வாழை போன்ற பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும், நெற்செய்கைக்கு ஆபத்தான சூழல் உருவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டத்தில் யானைகளின் தொல்லைகளினை கடந்த காலங்களில் இக் கிராம மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் தற்போதே யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகவும் இக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (160)

# மனித நாகரீகத்திற்கு விரோதமான செயல்

■ கருணாகரன்

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை நீர்த்தாங்கியில் நஞ்சு கலந்த விவகாரம் இன்று சர்ச்சையாக மாறியுள்ளது.

மாணவர்கள் குடிக்கின்ற நீரில் நஞ்சைக் கலந்தது மன்னிக்கவே முடியாத குற்றம்.

இது ஒரு கூட்டுப்படுகொலை முயற்சி என்பதில் சந்தேகமே இல்லை.

ஆகவே இந்தக் கூட்டுப் படுகொலை முயற்சிக்கு தண்டனை என்ன? இதைக் குறித்து ஒவ்வொருவரும் என்ன கருதுகிறார்கள்? பொது அமைப்புகள், புத்திஜீவிகள், அறிவியல் நிறுவனங்கள் போன்றன என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன?

இந்தக் கேள்விக்கு முறையான பதில் இல்லை.

நடந்த பாதிப்பும் நிகழ்ந்த சம்பவமும் சாதிய ரீதியாக பிற்படுத்தப்பட்ட தரப்பாக இருப்பதால், அந்தச் சமூகம் சார்ந்த அமைப்புகள் மட்டுமே தமது கண்டனக் குரலை உயர்த்தியுள்ளன.

அரசியற் கட்சிகளைப் பொறுத்தவரை ஈ.பி.டி.பி கொஞ்சம் கூடுதலான அக்கறையை எடுத்துள்ளது. இதற்குக் காரணம், இந்தச் சம்பவம் நடந்த பிரதேசம் ஈ.பி.டி.பி.யின் செல்வாக்குக்குரியதாகவும் இருக்கலாம். அத்துடன் இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. உயிர்ப்பிரச்சினை என்ற வகையிலுமாக இருக்கலாம்.

இதற்கப்பால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அனுதாபம் தெரிவித்திருக்கிறது.

இதற்கப்பால், நடந்த பாதிப்புக்கு, ஏற்படுத்தப்பட்ட உயிர் அச்சுறுத்தலுக்கு, கொலை முயற்சிக்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களும் அவர்களைச் சார்ந்தோரும் இது சாதிய ரீதியான ஒரு தாக்குதல், ஒரு ஒடுக்குமுறை முயற்சி என்று உணர்கின்றனர்.

அவர்கள் அப்படி உணர்வதில் தப்பில்லை. ஆனால் இதை அப்படியே நாம் ஏற்று அனுசரிக்க முடியாது. காரணம் எந்த நோக்கத்தின் பால்பட்டு யார் இதைச் செய்தாலும் அதே அடிப்படையில் கத்திக்கு கத்தி இரத்தத்திற்கு இரத்தம் பழிக்குப் பழி என்று நாமும் செயற்பட முடியாது.

இது ஒரு இழிவான செயலாகும். குரூரமான மனதின் வெளிப்பாடாகும். ஆகவே இந்த இழி செயலை, மனித நாகரீகத்திற்கு விரோதமான செயலை நாம் அம்பலப்படுத்த வேண்டும். முழுமையாக எதிர்க்க வேண்டும். சமூகம் இந்த இழிசெயலுக்கு எதிரான உணர்வைப் பெறக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் அற உணர்வையும் இச்செயலுக்கான எதிர்ப்புணர்வையும் வளர்த்தெடுக்க வேண்டும்.


இல்லையென்றால் வெறுமனே சாதி அடிப்படையில் இந்தப் பிரச்சினையை குறுகலாக்கி மேலும் சமூகப்பிளவை உண்டுபண்ணவே வழி வகுக்கும். ஆகவே இந்த மாதிரியான சூழலில் மிகவும் நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும், நியாயமாகவும் நடந்துகொள்ள வேண்டியது நம் கடமையாகும்.

அப்பொழுதே இந்தச் செயலை எதிர்ப்பதற்கான அடிப்படை பலம் பெறும் – சக்தி மிக்கதாகும். ஆகவே பலரையும் நீதியின்பால் ஒன்றிணைக்கும்.

# கள் விற்பனை நிலையத்தால் விபத்து ஏற்படும் அபாயம்

## விசனமடையும் கிளி.ரயில் நிலைய அதிகாரிகள்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி ரயில் நிலையத்திற்கு எதிரேயுள்ள கள்விற்பனை நிலையத்தால் கிளிநொச்சி ரயில் நிலைய அதிகாரிகள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

ரயில் தண்டவாளத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கள் விற்பனை நிலையம் அமைந்துள்ளது. கிளிநொச்சி நகரிலுள்ள மதுப்பிரியர்கள் கூடுதலாக இக் கள் விற்பனை நிலையத்திற்கு நாள் தோறும் வந்துசெல்லும் நிலையில் பல்வேறு இடர்களை ரயில் நிலையப் பயணிகளும் அதிகாரிகளும் நாள்தோறும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ரயில் நிலைய அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் இரவுவேளைகளில் கள் அருந்த வருபவர்கள் மதுவெறியில் தண்டவாளங்களில் படுத்துக்கிடப்பதாகவும் ரயில் வரப்போகின்றது எழுந்துசெல்லுங்கள் என்று கூறினாலும் தங்களுடன் சண்டைக்கு வருவதாகவும், கிளிநொச்சி ரயில் நிலையம் மின் வெளிச்சம் குறைந்து தற்போது காணப்படுவதினால் தண்டவாளத்தில் மதுபோதையில் படுத்திருப்பவர்களை எந்நேரமும் கண்காணித்துக்கொண்டிருக்கமுடியாதெனவும், இதனால் ரயில் வருகைதருகின்றபோது உயிராபத்துகள் ஏற்படக்கூடிய அபாயநிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ரயில் நிலையம், மாவட்ட செயலகம், கரைச்சி பிரதேச செயலகம், கரைச்சி பொது நூலகம் என்பவற்றிற்கு மிக அருகில் கள் விற்பனை நிலையம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (160)

# முகாமைத்துவ பயிலுநருக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவப் பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமும், குழுவாகப் பணியாற்றும் மனோபாவமும், தலைமைத்துவ தகைமைகளும் கொண்ட 30 வயதுக்குட்பட்ட இளம் கல்வியிலாளர்கள் மற்றும் தொழில் சார் நிபுணர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பொருளாதாரம், கணக்கியல், வர்த்தகம், முகாமைத்துவம், பொது வியாபாரம் நிர்வாகம் ஆகிய துறைகளில் முதலாம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பு மேற்பிரிவுடன் கூடிய பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தலம் www.cbsl.gov.lk ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் விண்ணப்ப முடிவுத்திகதி 01.04.2015 ஆகும். (10)

# கணித, விஞ்ஞான வளநிலையம் உருவாக்கியது சிறந்த செயற்பாடு



கிளிநொச்சி நகரில் கணித, விஞ்ஞான வள. நிலையம் உருவாக்கப்பட்டுள்ளமை சிறந்த செயற்பாடு என மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி திருநகர் வடக்கில் கடந்த சனிக்கிழமை கணித, விஞ்ஞான வளநிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்களுடைய பிள்ளைகளுக்கு இவ்வள நிலையமூடாக தங்களை வளப்படுத்துவதற்கான சேவைகள் வழங்கப்படவிருப்பது பெரும் கொடையாகும். எமது மாவட்டம் மீள்குடியேற்றத்தின் பின்னர் புது பரிணாமத்தினை அடைந்திருக்கின்றது. மாணவர்களின் அறிவு விருத்தியினை மேம்படுத்துவதும், கலைசார்பான விடயங்களை மேம்படுத்துவதும் முக்கியமானதாகும். அவ்வகையில் கணித, விஞ்ஞான வள நிலையம் திறந்து வைக்கப்பட்டிருப்பது அதனூடாக பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதும் அதனூடாக மாணவர்களின் கல்வியறிவு மேம்படுத்தப்படவிருப்பதும் சிறப்பானதாகும்.

அதுமட்டுமன்றி தற்போது நாம் இருப்பது கணனி யுகம். கணனி ஊடாக பல்வேறு விடயங்களை அறியக்கூடியதாகவிருக்கின்றது. நல்லவிடயங்களையும் தேவையற்ற விடயங்களையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. எமது பிள்ளைகளை தவறான வழியில் இட்டுச்செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. கலை சார்ந்த விடயங்களை சமூகத்திலே புறந்தள்ளி செல்கின்ற செயற்பாடு காணப்படுகின்றது. அவற்றினை மீளவும் கொண்டுவருவதற்கு இவ்வாறான வளநிலையங்கள் அவசியமானதெனவும் தெரிவித்தார். (160)

மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்குவது சோதனை நேரம்தான்! வெற்றி நேரமல்ல! - தோமஸ் ஹுட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பகைமறப்பு வேண்டாமா?

பிறரிடம் நமக்குப் பிடிக்காத குணங்களே பெரிதாகத் தெரிகின்றன. நம்மால் சகித்துக்கொள்ள முடியாதளவிற்கு அவர்களது பிழைகள் எல்லாம் நமக்குப் பெரிதாகத் தெரிகின்றன.

அவையே திரும்பத் திரும்ப நமக்கு நினைவூட்டப்படுவதால், அதுபற்றிய ஆவேசத்தில் நம் தவறுகள் நம் நினைவில் வருவதேயில்லை.

நமக்குத் தெரியாதவை அறியாதவை பற்றியெல்லாம் நினைவில் வருவதில்லை ஆதலால், நம் நினைவிலுள்ள மற்றவர்களின் பிழைகளே நமக்குப் பிழைகளாகத் தெரிகின்றன.

நாமும் தவறுகள் செய்திருக்கிறோமா அநீதிகள் செய்திருக்கிறோமா மற்றவர்கள் துன்பப்படவும் அச்சப்படவும் செய்திருக்கிறோமா என்பதெல்லாம் பற்றி நாம் யோசிப்பதேயில்லை.

அப்படி ஏதாவது யோசிக்கும்படி ஆகிவிட்டால் கூட, நம்மைவிட மற்றவர்கள் செய்ததே ஆகப்பெரும் கொடூரம் என்று சமாதானம் செய்துகொண்டு அந்த சங்கடமான நினைவுகளை விலக்கி விடுகிறோம்.

அவர்கள் ஆயிரமாயிரமாய்க் கொலை செய்தார்கள்; நாம் சில நூறுதானே செய்திருப்போம் என்கிற குரூர நியாயத்திற்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம்.

அதனால்தான் எந்த உறுத்தலுமில்லாமல் நாம் மற்றவர்கள் செய்த கொலைகளைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்க முடிகிறது. அந்தக் கொடூரக் குற்றவாளிகளோடு சமதையாக நமக்கென்ன பேச்சு என்ற இறுமாப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்க முடிகிறது.

நாம் குற்றமற்றவர்கள் என்று நாமாக வளர்த்துக்கொண்ட எண்ணம், நம்மை மற்றவர்களோடு இணங்க முடியாத அகங்காரிகளாக்கி விடுகிறது!

ஒன்பது அப்பாவிகளைக் கொலை செய்தவனோடு ஒப்பிட்டால் ஒரு அப்பாவியைக் கொலை செய்தவன் குற்றவாளி இல்லை என்று சொல்லிவிடலாமா? ஒன்று செய்தவன் ஒன்பது செய்தவனைக் குற்றம் சாட்டுவது போல, ஒன்பது செய்தவனுக்கும் குற்றம் சாட்ட உலகளாவியதாய் ஒரு லட்சம் கொலைகளைச் செய்தவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

"சீஸரின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவள்" என்பது போல நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட புனிதப்படுத்தலே, மற்றவர்களோடு பேச முடியாதவர்களாக இணக்கம் காண முடியாதவர்களாகச் செய்துவருகிறது நம்மை!

நாம் மட்டுமே எல்லோரையும்விடப் பெரிதாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற கொடியை உயர்த்திப் பிடித்தபடி அந்தக் கட்டைகளால் மற்றவர் தலைகளில் ஓங்கி அடித்தபடி இருக்கிறோம் – இஸ்ரேலியர்கள் போல!

நாம் செய்ததெல்லாம் அவர்கள் செய்ததற்குப் பதில்தான் என்றும் எங்களது தற்காப்புக்கானது என்றும் நியாயப்படுத்திக் கொள்கிறோம். அதுபோன்ற நியாயங்களெதையும் அவர்களும் வைத்துக் கொண்டிருந்தால் அதில் கொஞ்சமும் நியாயமில்லை என்று நாங்களாகவே நினைத்துக் கொள்கிறோம்.

இதுபோன்ற ஒருபக்கச் சிந்தனைகளோடு, இருதரப்புச் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினைக்குத்தான் தீர்வு காணமுடியும்?

மறுதரப்புச் சொல்வதைக் கேட்க விரும்பாமலே, பாதிக்கப்பட்டிருப்பது நாங்களே, எனவே நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும், நாங்கள் கேட்பதைத்தான் தர வேண்டும் என்று நாண்டு நிற்பது, ஒரு தரப்பை அழித்தோ அடிமைப்படுத்தியோதான் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட குகைமனிதர் காலத்து வழிமுறையல்லவா?

பகை நிறுத்தி சமாதானமாக வாழ விரும்பும் மனிதர் செய்ய வேண்டிய காரியங்களைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோமா? பேசிக் கொண்டிருக்கிறோமா?

- ஆசிரியர்

## மனித அவயவங்கள் மீட்பு; விசாரணைக்கு உதவக் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரின் பல இடங்களில் மனித அவயவங்கள் கிடைக்கப் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

யாரேனும் காணாமல் போனதாக தகவல்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதுகுறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனித அவயவங்கள் தொடர்பான அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு பொது நல்லிணக்க மற்றும் கிறிஸ்த்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமராக்களை ஆராய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் கொழும்பு நகரை அண்டிய சில பிரதேசங்களில் மனித அவயவங்கள் மீட்கப்பட்டமை சர்ச்சைக்குரிய விடயமாக உள்ளது.

## மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்கிறது அரசு

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் அபிலாஷைகளை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாக ஜே.வி.பி.கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டமை குறித்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்கள், மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்தது இவ்வாறான ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யவே மக்கள் வாக்களித்திருந்தனர்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், கடந்த அரசாங்கத்தின் கள்வர்களுக்கு தண்டனை விதிக்கவும் மக்கள் வாக்களித்தனர். எனினும் இந்த அரசாங்கம் கள்வர்கள், மோசடியாளர்கள், ஊழல் பேர்வழிகளை பாதுகாக்கின்றது.

விஞ்ஞான ரீதியான அடிப்படையில் அமைச்சுப் பதவி வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அமைச்சுப் பதவிகள் குட்டி போடத் தொடங்கியுள்ளன. இதனையே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் மேற்கொண்டிருந்தது.

நூறு நாள் திட்டம் பூர்த்தியாக முன்னமே அரசாங்கம் மக்கள் அபிலாஷைகளை உதாசீனம் செய்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## சரண குணவர்தனவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரண குணவர்தனவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம், நேற்று உத்தரவிட்டுள்ளது.

அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை மனுவை நிராகரித்த அத்தனகல நீதவான் காவிந்தியா நாணயக்கார, சரண குணவர்தனவை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

90 இலட்சம் ரூபா பெறுமதியான இரும்பு மோசடி சம்பவங்கள் தொடர்பில் அவருக்கு எதிராக செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிலாபத்தைச்சேர்ந்த வர்த்தகரான மொஹமட் ரஷ்மி என்பவரால் மூன்று வருடங்களுக்கு முன்னர் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் முன்னாள் அமைச்சருடன் பேசப்பட்ட வர்த்தக தொடர்பிலான ஒலிநாடாவையும் அந்த வர்த்தகர், குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஒப்படைத்திருந்தார்.

அதனடிப்படையிலேயே அவர், கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 40 வேலைத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

முதற்கட்டமாக வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட வகையில் 100 நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 40 வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

இனம் காணப்பட்ட வேலைத்திட்டங்களின் மதிப்பீடுகள் தயாரிக்க அந்தந்த திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், நீர்ப்பாசனம், கல்வி, உள்ளூராட்சி மற்றும் விவசாய அமைச்சுக்களின் கீழ் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

மதிப்பீடுகளை விரைந்து தயாரித்து வழங்கி உதவுமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் கேட்டுள்ளார். (92)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 4 பெண்கள் உட்பட 12 பேர் கைது

(கொழும்பு)

பணத்திற்காக சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் இடமொன்றிலிருந்து 4 பெண்கள் உட்பட 8 பேரை கல்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்களில் ஒரு தாயும், புதல்வியும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்பிட்டிய ஆனாவாசல பிரதேசத்தில் வீடொன்றில் சிலர் ஒன்று கூடி பணத்திற்காக சூதாட்டத்தில் ஈடுபடுவதாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

## சிமெந்தின் விலை அதிகபட்சம் 870

(கொழும்பு)

சிமெந்து மூடையொன்றின் அதிகபட்ச விற்பனை விலை 870 ரூபாவாகும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நிதியமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து



# தமிழர் அரசியலில் துரோக வெறி! -3

> 20ஆம் நூற்றாண்டின் நாற்பதுகளில், ஐம்பதுக்கு ஐம்பதுக்கு ஆதரவு வழங்காத எந்த தமிழனும் ஒரு துரோகியே. சுதந்திரத்துக்குப் பின் சமஷ்டியை நிராகரிக்கும் தமிழர்கள் துரோகிகளானார்கள். பின்னாளில் ஒரு தனித் தமிழ் நாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எந்த தமிழனும் துரோகியாகக் கருதப்பட்டான். அதன் பின்னர் ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கும் எந்த தமிழனும் துரோகியாக கணிக்கப் பட்டான். அதற்குப் பின் எல்.ரீ.ரீ.ஈயை தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் துரோகிகளாக கருதப்பட்டன. எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப் பட்டதின் பின்னர் தமிழ் ஈழக் கோரிக்கை அதன் வீரியத்தை இழந்துவிட்டது, தாயகம், சுயநிர்ணயம் மற்றும் தேசியம் என்கிற கருத்துக்கள் தமிழ் தேசியவாதத்தின் புதிய தாரக மந்திரங்களாக உருவெடுத்துள்ளன. இந்த மூன்று கருத்துக்களையும் எதிர்க்கும் எவரும் துரோகியாவார்.

**நேற்றைய தொடர்ச்சி...**

துரோகி என குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்படுவது தமிழர் இடையே ஒரு புதிய வடிவத்தையும் மற்றும் உள்ளடக்கத்தையும் பெற்றது. தமிழ் அரசியல் போட்டியாளர்களை துரோகிகள் என அழைத்த ரி.யு.எல்.எப் காலப் போக்கில் தாங்களே துரோகத்தனமானவர்கள் என்கிற பட்டத்தையும் பெறவேண்டியதானது.

புலிகள் ரி.யு.எல்.எப். இற்கு எதிராக மாறி முன்னாள் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரத்தை 1982இல் சுட்டுக் காயப்படுத்தினார்கள். அப்போதுதான் அமிர்தலிங்கம் "மிருகங்களான ஆட்டையும் மாட்டையும் கடித்து இப்போது மனிதர்களையும் கடிக்க ஆரம்பித்து விட்டார்கள்" என்று கடுமையாகத் தாக்கி ஒரு அறிக்கையினை வெளியிட்டார்.

தமிழர் விடுதலைப் போராட்டம் முன்னேற்றமடைந்ததும் போராளிகள் ரி.யு.எல்.எப் தலைவர்களை துரோகிகள் என அழைக்க ஆரம்பித்தார்கள். விரைவிலேயே பலர் கொல்லப்பட்டார்கள். பல அரசியல் போட்டியாளர்களை துரோகிகள் என வர்ணித்த அமிர்தலிங்கம் கூட அநியாயமாக துரோகி என்கிற பட்டத்துடன் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிகளும்கூட பக்கவாட்டிலும் மற்றும் உட்பக்கமாகவும் திருப்பப்பட்டன. விரைவிலேயே தமிழ் குழுக்களிடையே சகோதர யுத்தம் மூண்டது. எல்.ரீ.ரீ.ஈயினால் மொத்த இயக்கங்களையும் துரோகிகள் என குறிப்பிட்டு அவர்களை தமிழ் பிரதேசங்களில் இருந்து தடை செய்தார்கள். போட்டிக் குழுக்களின் திரளான படுகொலைகள் தொடர்ந்தன.

இந்திய இராணுவம் இங்கு வந்தபின் அதற்கும் எல்.ரீ.ரீ.ஈக்கும் இடையே போர் வெடித்தது, இந்திய வரிசையை பின்பற்றிய ஈபிஆர்எல்எப், ஈஎன்டிஎல்எப், ரெலோ போன்ற குழுக்களால் பல புலிகள் கொல்லப்பட்டார்கள். இந்திய இராணுவம் சென்றதின் பின்னர் இந்திய தமிழ் தேசிய இராணுவத்தை சார்ந்த அங்கத்தவர்கள் அனைவரையும் புலிகள் மொத்தமாக படுகொலை செய்தார்கள். இரண்டு பக்கமும் ஒருவரை ஒருவர் தமிழர் பிரச்சினையின் துரோகிகள் என வர்ணித்துக் கொண்டார்கள்.

ஈபிடிபி, புளொட், ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எப் போன்ற அமைப்புக்களை சேர்ந்த 60 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை 2002 யுத்த நிறுத்த காலத்தில் எல்.ரீ.ரீ.ஈ. கொலை செய்தது. அவர்கள் அனைவருக்கும் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் ஒப்பீட்டளவில் மிதவாத ரி.என்.ஏ தலைவர்களான ஆர்.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கூட துரோகிகள் என முத்திரையிடப் பட்டுள்ளார்கள். அவர்களுடைய உருவப் படங்கள் மற்றும் உருவப் பொம்மைகள் என்பனவும் எரிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் எல்.ரீ.ரீ.ஈயின் துணைத் தலைவரான மாத்தையா என்கிற கோபாலசாமி மகேந்திரராஜா பகிரங்கமாக அமிர்தலிங்கத்தை துரோகி எனக் கண்டித்தார், பின்னாளில் அவரே புலிகளின் தலைவரினால் கொல்லப்பட்டார். மாத்தையா இப்போது துரோகி என அழைக்கப் படுவதுடன் பிரபாகரனை வீழ்த்த சதி செய்தார் என்ற குற்றமும் அவர்மீது சுமத்தப்பட்டுள்ளது.

150 இற்கும் மேற்பட்ட அவரது ஆதரவாளர்களும் துரோகிகளாக கருதி கொல்லப்பட்டார்கள். மாத்தையாவும் ஒரு பாதுகாப்பான சட்டபூர்வமற்ற "கங்காரு" நீதிமன்றினால் விசாரிக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டார். மாத்தையா புலிகளின் தலைவராக இருந்தபோது அநேக புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ரெலோ உறுப்பினர்களை துரோகிகள் எனக்கூறி கொல்லும்படி உத்தரவிட்டுள்ளார்.

புளொட் அமைப்பும் நூற்றுக்கணக்கான அதன் அங்கத்தவர்களை துரோகிகள் என சந்தேகித்து கொலை செய்திருக்கிறது. துரோகிகள் என சந்தேகிக்கப் படுபவர்களை கொலை செய்வதில் நிபுணத்துவம் பெற்ற சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவர் இந்தச் செய்கை காரணமாக "டம்மிங் கந்தசாமி" என்கிற பெயரைப் பெற்றிருந்தார்.

பின்னர் அநேக புளொட் தலைவர்களும் மற்றும் அங்கத்தவர்களும் துரோகிகளாகக் கருதி எல்.ரீ.ரீ.ஈயினால் கொல்லப்பட்டார்கள். இறுதியாக புளொட் தலைவரான முகுந்தன் என்கிற உமா மகேஸ்வரன், தனது சொந்த மனிதர்களாலேயே கொல்லப்பட்டு பம்பலப்பிட்டி தொடருந்து பாதை அருகே வீசப்பட்டிருந்தார். ஒரு துரோகிக்கு இதுதான் தண்டனை என அவரைக் கொன்றவர்கள் சொன்னார்கள்.

ரெலோ அமைப்பு பொபி மற்றும் தாஸ் அமைப்புகளாக பிளவடைந்தது. ரெலோ தலைவரான தாஸ் வடமராட்சி உடுப்பிட்டியை சேர்ந்தவர், சிறி சபாரத்தினத்தால் தவறான பாதுகாப்பு அர்த்தத்தில் தூக்கத்தில் ஆழ்த்தப்பட்டார். அவரை யாழ்ப்பாண மருத்துவ மனைக்கு ஆயுதங்கள் இன்றி அழைத்து வந்தபோது அந்த வளாகத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.

அதன்பின் பொபி பிரிவினர் தாஸ் பிரிவினரை துரோகிகள் எனக்கூறி அவர்கள்மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டார்கள். அதை எதிர்த்து வடமராட்சி வதிவிடதாரிகள் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தியபோது அவர்கள்மீது ரெலோ துப்பாக்கிச் சூடு நடாத்தியது, அது வெளியிட்டிருந்த ஒரு பத்திரிகைச் செய்தியில் துரோகிகள் படை மீது துப்பாக்கிச் சூடு நடாத்தப் பட்டது என்று கூறியிருந்தது.

அது நடந்து சில மாதங்களுக்குள் எல்.ரீ.ரீ.ஈ, ரெலோ மீது தாக்குதல் நடாத்தி நூற்றுக்கணக்கான ரெலோ அங்கத்தவர்களை கொன்றது. சிறீசபாரட்னத்தை கைது செய்த எல்.ரீ.ரீ.ஈயின் யாழ்ப்பாண தளபதி கிட்டுவினால் 1986 மே 5இல் அவர் தனிப்பட்ட முறையில் கொல்லப்பட்டார்.

முன்னாள் கிழக்கு பிராந்திய புலி தளபதி விநாயகமூர்த்தி முரளீதரனின் கிளர்ச்சியினால் 2004 மார்ச்சில் பிரதான நீரோட்டத்தை சேர்ந்த எல்.ரீ.ரீ.ஈயினால், பெரும் எண்ணிக்கையிலான கிளர்ச்சி குழு அங்கத்தவர்கள் துரோகிகளாக கருதி கொல்லப்பட்டார்கள். விரைவிலேயே கருணா அரசாங்கத்துடன் இணைந்து பிரபாவின் விசுவாசிகளை கிழக்கின் துரோகிகள் எனக்கூறி அவர் கள்மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டார்.

கடந்த பல வருடங்களாக எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கு வெளியேயும் மற்றும் உள்ளேயும் ஏராளமானவர்களை துரோகிகள் எனச் சந்தேகித்து கொன்றுள்ளது. தொடர்ச்சியான அடிப்படையில் புதுப் புது துரோகிகளை கண்டு பிடிப்பது எல்.ரீ.ரீ.ஈயின் நவ - பாசிச இயல்பு ஆகும். யாராவது வித்தியாசமான கருத்தைக் கொண்டிருந்தால் அல்லது அவர்களது பாதையை பின்பற்றாமலிருந்தால் சுலபமாக அவர்கள்மீது துரோகி என முத்திரை குத்தி விடுவார்கள். அநேகம்பேர் மீது தவறாக குற்றம் சுமத்தி அவர்களை கொலை செய்த எண்ணிலடங்கா சம்பவங்கள் உள்ளன.

பிரபாகரனுக்கு பிந்திய சூழ்நிலையில். கூட பல்வேறு வித்தியாசமான கருத்துக்கள் மூலமாக துரோகி எனப் பெயர்சூட்டும் எல்.ரீ.ரீ.ஈயின் அரக்கத்தனமான போக்கு உலகளாவிய தமிழ் புலம் பெயர்ந்தவர்களிடையேயும் தொடர்கிறது. கேபி என்கிற செல்வராசா பத்மநாதன் மற்றும் அவரது ஆதரவாளர்களை புலிகள் மற்றும் புலிகள் சார்பு சக்திகள் துரோகிகள் என அழைத்து அவர்களை எதிர்க்கின்றன. அதேபோலத்தான் கருணா, பிள்ளையான், தயா மாஸ்ரர் மற்றும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் இதர எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களும் அழைக்கப் படுகிறார்கள்.

ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த முன்னாள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் முரளீதரன் ஆகியோர் துரோகிகள் என அழைக்கப்பட்டதைப் போல, புதிய சிறிசேனவின் அமைப்பின் கீழுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரை துரோகிகள் என அழைப்பதற்கு இன்னும் சிறிது கால அவகாசம் மட்டுமே தேவைப்படுகிறது.

எந்த ஒரு தமிழரும் சிநேகபூர்வமான அரசியலில் அல்லது அரசாங்கத்துக்கு ஆதரவான ஒத்துழைப்பை பிரேரித்தால் துரோகத்தனத்தின் டமோகிளென் வாள் அவரது தலைக்கு மேல் தூங்கும்.

பிரபாகரனுக்கு பின்னான காலத்தில் இருக்கப்போகும் செயற்பாட்டு முறை படுகொலை அல்ல ஆனால் அவர்களது குணாம்சத்தை கொலை செய்வது. இந்த யோசனை என்னவென்றால் பாதிக்கப்பட்டவரை துரோகி என இலக்கு வைத்து அவரை கொல்லாமல் கொல்வது. இந்தப் போக்கினை கண்டு கொள்ளாமல் அல்லது இப்பொழுது உள்ளபடியே விட்டுவிட்டால் அது ஒரு பேரழிவை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

இந்த துரோக வெறியானது தமிழர்களை பாதித்ததின் விளைவாக கடந்த காலங்களில் எண்ணற்ற மக்கள் துரோகிகள் என பழி சுமத்தி கொன்றொழிக்கப் பட்டார்கள். அது தற்சமயம் தனது அசிங்கமான தலையை திரும்பவும் உயர்த்த ஆரம்பித்துள்ளது மற்றும் எதிர்காலத்தில் இது ஒரு தீவிர பிரச்சினையாக மாறக்கூடிய சாத்தியம் உள்ளது.

துரோகத்தன்மை தொடர்பாக இடம்பெறும் தொடர் நிகழ்வுகள் தமிழர்களின் ஒரு துயரம், இதற்காக மற்றவர்களைப் பழி சொல்ல முடியாது. இதற்கு உடனடியாக ஒரு தீவிர சுய பரிசோதனை நடாத்துவது அவசியம். தமிழ் மக்கள் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும், அது கடந்த காலங்களில் சமூகத்தை சீரழித்தது எதிர்காலத்திலும் அப்படி நடப்பதற்கும் வாய்ப்பு உண்டு.

# வாக்குறுதிகளை நிறைவேற்ற ஒன்றிணைந்து செயற்படுவோம்

## ஜனாதிபதி மகிழ்ச்சி



அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற பேதமின்றி ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

புதிய அமைச்சர்களாக பதவியேற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவருவதிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் திருத்தம் மேற்கொள்வதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி பங்குதாரராக முடியும். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு அனைவரும் ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கமும் இதனூடாக நிறைவேறியுள்ளது என்றார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 26 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் பதவிப் பிரமாணம் செய்தனர்.

இவர்களில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 11 அமைச்சர்களும், 5 இராஜாங்க அமைச்சர்களும், 10 பிரதி அமைச்சர்களும் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் அரசாங்கத்திற்கே ஆதரவு

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

ஸ்ரீங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 26 பேர் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றாலும், ஏனையவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குவார்கள் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

புதிய அமைச்சர்கள் பதவியேற்றமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

11 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், 5 இராஜாங்க அமைச்சர்களும், 10 பிரதியமைச்சர்களும் நேற்றுமுன்தினம் பதவியேற்றுக்கொண்டனர். தாம் தேசிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்



சிரேஷ்ட தலைவர்கள் உள்ளிட்ட ஏனையவர்கள் அரசாங்கத்துடன இணைந்து கொள்ளாவிட்டாலும், எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியில் இருக்கும் அவர்கள் அரசாங்கம் விடும் பிழைகளைச் சுட்டிக் காட்டும் அதே நேரம், முக்கியமான திட்டங்களுக்கு அரசாங்கத்துக்கு ஆதரவளித்துச் செயற்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

# சுதந்திரக்கட்சியை பிரிக்க ஐக்கிய தேசியக்கட்சி திட்டம்

## ரத்னதேரர் குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை இரண்டு படுத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எதிர்பார்ப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவு படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மோசடிக்காரர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி தண்டனை வழங்குவதில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் சிலர் கட்சி பிளவுபடுவதனால் ஏற்படும் ஆபத்தினை அறிந்திருக்கிறார்கள், ஆனால் சிலர் இவ் ஆபத்தினை அறிந்திருக்கவில்லை.

தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் உள்ள மோசமான அம்சங்களை நீக்குவதற்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி வில்லியம் கொப்பல்லாவா போன்ற ஒருவரை நியமிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய ஒன்றுபடாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் கடந்தகாலத்தில் பல முறைகேடுகள்

## அமைச்சர் தலதா அத்துகோரல தகவல்



வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் கடந்த காலத்தில் பல முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் பயிற்சி மையமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்விற்கு 126 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெசாக் தினத்தன்று பக்திப் பாடல் பயிற்சிக்கு 56 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. தானம் வழங்குவதற்கு 35 இலட்சம் ரூபாய் செலவு செய்யப பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் நத்தார் தின நிகழ்விற்கு 11 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் பணியக விளம்பர செலவு 362 மில்லியன் ரூபாய்.

எனக்கும் இவ்வாறு செலவு செய்ய முடியும். புது வருட நிகழ்வுகள் நடாத்த முடியும். இவ்வளவு பணம் இங்கு வீணடிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடுகளை தடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினை சரியான வழியில் கொண்டு செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் போதாது என அமைச்சர் தலதா அத்துகோரல மேலும் தெரிவித்துள்ளார்.

# மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் என மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ரஞ்சித் அலுவிஹாரே தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகள் முற்று முழுதாக வீழ்ச்சியடைந்துள்ளன. இந்த நிலையில் மாகாண சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

மாகாணசபையின் எதிர்கால அமர்வுகளின் போது உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பார்கள். தீர்மானம் எடுக்கும் அளவிற்கு உறுப்பினர்கள் பிரசன்னமாகமாட்டார்கள்.

மத்திய மாகாண ஆளுநர் தொடர்பிலும் எதிர்க்கட்சியினருக்கு நம்பிக்கையில்லை. மாகாண ஆளுநர் ஒருதலைப் பட்சமாகவே செயற்படுகின்றார்.

ஜனாதிபதி மாறிய போதிலும் ஆளுநர் அலுவலகத்தில் முன்னைய அரச அதிகாரிகளே கடமையாற்றி வருகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

பெரும்பான்மை உறுப்பினர்களின் பலத்தின் அடிப்படையில் ஏற்கனவே இரண்டு தடவைகள் மத்திய மாகாணசபையின் ஆட்சி அதிகாரம் மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சியின் கடமைகளை செய்ய தவறமாட்டோம்

## சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் உறுதி



(கொழும்பு)

எதிர்க்கட்சியின் கடமைகளை ஆற்றிக்கொண்டே அமைச்சுப் பொறுப்புக்களையும் வகிப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடாபில் அண்மையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

இதன்படி, எமது உறுப்பினர்கள் சிலர் தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அமைச்சர்களாக இவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

நானும், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஜோன் செனவிரட்னவும் அமைசசுப் பொறுப்புக்களை ஏற்காது கட்சியினதும் நாடாளுமன்றத்தினதும் பொறுப்புக்களை ஆற்றத் தீர்மானித்தோம்.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்து அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைசசுப் பதவியைப் பெறறுக்கொண்டவர்களுக்கு நாம் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

நாம் தான் எதிர்க்கட்சியின் பணிகளை ஆற்ற உள்ளோம். இதனால் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

எதிர்க்கட்சியின் கடமைகளை ஆற்றிக்கொண்டே இந்த அமைச்சுப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

# தற்போதைய அரசாங்கத்தை நீக்க மக்களை அணி திரட்ட நேரிடும்

## ரில்வின் சில்வா எச்சரிக்கை



அரசாங்கமும் புதிய அமைச்சர்களும் வெட்கம் கெட்ட செயலை மேற்கொண்டுள்ளதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

100 நாள் வேலைத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக அறிவித்த அரசாங்கம் அமைச்சரவையை விசாலப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த இரண்டு தரப்பினரதும் நடவடிக்கைகள் வெட்கம் கெட்ட செயலாகவே கருதப்பட வேண்டும்.

நேற்றுமுன்தினம் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் ஏற்கனவே அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்களின் பதவிகள் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரையிலேயே நீடிக்கும் என் பதனை மறந்து விடக்கூடாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி தேசிய அரசாங்கமொன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தை நீடிக்க முயற்சித்தால், கடந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மக்களை அணி திரட்டியது போன்று இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மக்களை அணி திரட்ட நேரிடும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# தேசியகீதத்தையும் தேசியக்கொடியையும் நினைத்தபடி மாற்றமுடியாது

## முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன


நினைத்தவர் எல்லாம் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மாற்றியமைக்க முடியாது என முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அரசியல் அமைப்பின் பிரகாரம் இவ்வாறு மாற்றங்களை செய்ய முடியாது.

தேசிய கீதத்தை அல்லது தேசியக் கொடியை மாற்றி அமைக்க முயற்சிப்பது அரசியல் அமைப்பிற்கு முரணானது.

இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாட முடியும் என அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்த கருத்துக்கு நெறகின் அரசியல்வாதிகள் பலரும், ஊடகங்களும் வெவ்வேறு வழிகளில் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் - மைத்திரி அதிகாரப் போட்டியை விடுத்து 1978இன் மக்கள் விரோத அரசியலமைப்பை முற்றாக மாற்ற வேண்டும்!



வானவில் 51 இதழிலிருந்து

ஜனவரி 8 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு நின்று அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்தன. தாம் ஓரணியில் திரண்டதிற்கு அவர்கள் சொன்ன காரணங்கள், மகிந்த ராஜபக்ஷ சர்வாதிகார ஆட்சி நடாத்துகிறார், குடும்ப ஆட்சி நடாத்துகிறார், ஊழல் மோசடித்தனமான ஆட்சி நடாத்துகிறார், இனவாத ஆட்சி (இது தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் குற்றச்சாட்டு) நடாத்துகிறார் என்பவை ஆகும்.

அவர்கள் அவரை எதிர்ப்பதற்கான ஒரு காரணத்தை மட்டும், அதுவும் மிக முக்கியமான காரணத்தை மட்டும் சொல்லவில்லை. அதாவது தம்மை ஓரணியில் திரள்வதற்கு பின்னணியில் நின்று செயற்பட்ட உலக மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு மகிந்த எதிரானவர் என்றபடியால்தான் தாம் அந்த சக்திகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றுபட்டு நிற்கிறோம் என்ற விட்யத்தை மட்டும் அவர்கள் சொல்லவில்லை.

அந்த விடயத்தை மறைத்துவிட்டு, மகிந்தவை வீழ்த்தி நாட்டில் 'நல்லாட்சி' கொண்டுவரப் போகின்றோம் என்று மட்டும் சொன்னார்கள். அந்த நல்லாட்சி என்பது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமைய ஒழித்து நாடாளுமன்றத்தை அதிகாரம் மிக்கதாக்குவது, தேர்தல் முறையில் நிலவும் விகிதாசார மற்றும் விருப்பு வாக்கு முறையை ஒழிப்பது, சுதந்திரமான முறையில் நீதித்துறை மற்றும் பொலிஸ் சேவை என்பனவற்றை இயங்க வைப்பது, ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பது இப்படி பலப்பல.

இதிலும் கூட நாட்டின் பல பிரச்சினைகளுக்கு அடிப்படையான, நாட்டை 30 வருடங்களாக உள்நாட்டுப் போர் என்ற அழிவுக்கு இட்டுச் சென்ற இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது சம்பந்தமாக் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் எதிரணி கட்சிகள் எவ்வித திட்டத்தையும் முன்வைத்திருக்கவில்லை. இருந்தும் தமிழ் தலைமை (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) எவ்வித நிபந்தனையும் இன்றி எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது.

புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தபின்னர் '100 நாள் வேலைத்திட்டம்' ஒன்றின் மூலம் முக்கியமான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர். அதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு முக்கியமானது. ஆனால் நடைமுறையில் 100 நாள் வேலைத்திட்டம் என்பது முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரையும், அவரது ஆட்சியின் ஆதரவாளர்களையும் பழி வாங்குவது என்பதாகவே நடந்துள்ளது.

225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் வெறுமனே 49 உறுப்பினர்களை மட்டும் கொண்ட சிறுபான்மை காபந்து அரசாங்கமான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், முன்னைய அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கொண்டு வந்த மக்கள் நலன்சார் வரவு செலவு திட்டம் இருக்கத்தக்கதாக தமக்கு அடுத்த பொதுத் தேர்தலில் செல்வாக்கு தேடுவதற்காக இன்னொரு மக்களுக்கு சலுகை வழங்கும் வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்தது. நாட்டின் பொருளாதார நிலையை கணக்கில் எடுக்காது இந்தியாவில் தமிழக அரசுகள் மேற்கொள்ளும் இலவச திட்டங்கள் போல ஐ.தே.க.அரசின் வரவு செலவு திட்டமும் அமைந்தது.

புதிய அரசாங்கம் வாக்குறுதி அளித்தபடி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் இப்பொழுது விருப்பமின்மையும், இழுபறி நிலைமையும் தோன்றியுள்ளதை காண முடிகிறது. புதிய ஜனாதிபதி மைத்திரி வெற்றி பெற்ற பின் நடைபெற்ற பதவி ஏற்பு வைபவத்தின் போது, தான் இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்தார். அதன்மூலம் தற்போதைய பதவிக் காலத்தை முழுமையாக அனுபவிக்கப் போவதை சூசமாக வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைமையை ஏற்றுள்ள நிமால் சிறிபால டி.சில்வா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ அணியினர் (இவர்கள் நாடாளுமன்றத்தில் 132 உறுப்பினர்களுடன் இன்னமும் பெரும்பான்மையினராக உள்ளனர்), நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் உள்ள எல்லா அதிகாரங்களையும் நீக்கக்கூடாது என்றும், அத்துடன் அப்பதவியில் உள்ள சில அதிகாரங்களைக் குறைக்கும் அரசமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் போது, அதற்குச் சமாந்திரமாக தேர்தல் முறையிலும் சீர்திருத்தங்களை மேற்கொண்டால் மட்டுமே தமது கட்சி அதை ஆதரிக்கும் எனக் கூறினார். இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையில் தோன்றியுள்ள இழுபறி அதிகாரப் போட்டியின்பாற்பட்டதே.

மறுபக்கத்தில் இரு கட்சிகளும் இணைந்து 'தேசிய அரசாங்கம்' ஒன்றை அமைத்து செயற்படுவது பற்றிய கேலித்தனமான உரையாடல்களும் நிகழ்கின்றன.

உண்மையில் ஒரு நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவது யுத்தம், இயற்கைப் பேரழிவுகள், அந்நியப் படையெடுப்பு போன்ற தேசிய நெருக்கடிகளின் போதே. அப்படியான ஒரு சூழல் தற்பொழுது இலங்கையில் இல்லை.

புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலத்தில் அப்படியொரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். அப்படி இல்லாமல் ஐ.தே.க.வின் ஆதரவுடன் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதால் அக்கட்சிக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரி தனது சுதந்திரக் கட்சியை தேசிய அரசாங்கம் என்ற படுகுழியில் தள்ள முயல்வது முற்றிலும் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

காலத்தை விரயம் செய்யாமல், புதிய அரசாங்கம் செய்ய வேண்டியது எல்லாம், மக்களுக்கு வாக்குறுதி அளித்தபடி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டியதே. அதுமாத்திரமல்லாமல், 1978இல் அப்போதை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசால் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட எதேச்சாதிகரமான அரசியல் அமைப்பு முறையை முற்றாக மாற்றி எழுத வேண்டும்.

வழமை போல ஆட்சிக்கு வரும் முன்பாக ஒன்றும், வந்த பின்னர் இன்னொன்றும் கூறி, நிறைவேற்று அதிகாரத்தை ருசி பார்ப்பதற்கு புதிய ஜனாதிபதியும் முயற்சி செய்தால் மக்கள் அதை உறுதியுடன் எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும்.

இது ஏன் அவசியமெனில், உண்மையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் கடமையும், தேவையும், அருகதையும், கயவர்களான அரசியல்வாதிகளிடம் அல்ல நாட்டு மக்களிடமே இருக்கிறது.

# கழிவு கொட்டுவதை நிறுத்தி மக்களுக்கான தீர்வை வழங்குங்கள்

## வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நான் அரசாங்க அலுவலர் அல்ல வலி.தென்மேற்கு மக்களால் உருவாக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியாக உங்கள் முன்நிற்கின்றேன். கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகளால் மக்களுக்கு பேரிடரும், பேராபத்தும் வரும் என்பதனை 2011 சபை தீர்மானம் முதல் இன்றுவரை கூறி வருகின்றேன்.

எனவே மக்களுக்கு வகை சொல்லவேண்டிய கடப்பாடு உள்ளதால் தயவுடன் கழிவு கொட்டுவதை நிறுத்தி மக்கள் பக்கம் பாருங்கள்.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.சி. மகேந்திரன் தெரிவித்தார். கல்லுண்டாய் திண்மக் கழிவு குறித்த உயர்மட்ட கலந்துரையாடல் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண பேரவைத்தலைவர் க.சிவரட்ணம், வடமாகாண சூழலியல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட தவிசாளர் சி.சி.மகேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபைக்கு என பிரத்தியேகமான காணிகள் அரியாலை, பொம்மைவெளி, பூம்புகார் போன்ற இடங்களில் உள்ளன.

எமக்கு எமது கல்லுண்டாய் பிரதேசம் முக்கியம், எனது அனுமதியின்றி கழிவுகள் கொட்டப்படுகின்றன. பொருத்தமற்ற வீதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவையாவும் எனது அனுமதியின்றி சட்டத்திற்கு முரணாக இடம்பெறுகின்றன.

வடக்குமாகாணம் எமக்கு கழிவகற்றல் திட்டம் தொடர்பான பொறிமுறை தொகுதிகளை பெற்றுத்தர வேண்டும், நவீன இயந்திர சாதனங்களை எமக்கு பெற்றுத்தரவேண்டும், நாம் வெளிவாரி ரீதியாகவோ, நிரந்தர அடிப்படையிலோ ஆளணியை பயன்படுத்தி எமது பிரதேசத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை முன்னெடுப்போம்.

இன்னுமொரு சபை ஏமது வளத்தை பயன்படுத்த அனுமதிக் கமுடியாது, எமது மக்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும் மக்களை இடரில் இருந்து காக்கவேண்டும்.

எனவே முதல்வர் தீர்க்கமான முடிவினை எய்தி எமது சபையின் எதிர்கால திட்டமிடலுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதேவேளை வடமாகாண முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் திண்மக்கழிவு பொறிமுறை குறித்து கேட்டறிந்து கொண்டதுடன் விரைவான பதிலை வழங்கவுள்ளதாக தெரிய வருகிறது. மேலும் 19 மில்லியன் ரூபா திட்டம் குறித்தும் ஆராயப்பட்டது. (92)

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை

வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகப் பகுதியில் உள்ள ஆவரங்கால் சிவன் வீதியில் இருந்து ஆவரங்கால் சர்வோதய வீதி வரையிலான பாதை ஒன்று நீண்ட கரலமாக கற்களும், குளிகளுமாக திருத்தப்படாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப் பாதையினூடே பாடசாலை மாணவர்கள் பெருந்தோட்ட விவசாயிகள், பொதுமக்கள் போன்றோர் தினமும் பயணம் செய்வதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அப்பாதையில் பயணிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த பாதையானது ஆவரங்கால் பிரதான வீதியிலிருந்து பதிவாக காணப்படுவதனால் மாரி காலங்களில் தேங்கும் மழைநீரினால் பாதையில் உள்ள கற்கள் வளர்சியடைகின்றது. எனவே ஆவரங்காலில் உள்ள பிரதான பாடசாலைகளில் ஒன்றான ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்திற்கு இப் பாதையினூடாகவே அதிகளவு மாணவர்கள் பயணம் செய்வதனால் பாரிய நெருக்கடிகளை சந்திக்கின்றனர். கற்களாக காணப்படும் இப்பாதையை திருத்தி பயணத்திற்கு ஏற்ற வகையில் தருமாறு இப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(08)

# தொடரும் கால்நடை திருட்டு

அச்சுவேலி பகுதியில் தற்போது கால்நடைகள் மற்றும் கூடுகளிலுள்ள கோழிகள் என்பன இனந்தெரியாதோரால் களவாடப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக தோட்ட நிலங்களில் கட்டிவிடப்படும் வளர்ப்புக் கால்நடைகள் மற்றும் ஆடுகள் என்பனவே இவ்வாறு திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. பெறுமதி வாய்ந்த இந்த கால்நடை திருட்டால் தாம் பாரிய நஷ்டமடைந்துள்ளதாகவும் கால்நடை பராமரிப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கூடுகளில் அடைந்து வளர்க்கப்படும் கோழிகளும் இரவு வேளைகளில் திருடப்படுவதாகவும் கோழி வளர்ப்பினை மேற்க்கொள்வோர் கவலை தெரிவித்துள்ளனர். பல ரூபாய் பணத்தைச் செலவு செய்து கோழிகளுக்கான தீவனத்தைப் பெற்று வளர்த்து வரும் நிலையில் அவற்றை திருடர்கள் திருடிச்செல்வதால் தாம் நஷ்டமடைவதுடன் அதனால் எவ்வித பிரயோசனமும் தமக்கு இல்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (85)

# ஆடுகள பீதியில் அவுஸ்ரேலியா வேகப்பந்துக்கு சாதகமாக்க கோரிக்கை



உலகக்கிண்ணத் தொடரின் 2 ஆவது அரையிறுதி போட்டி நடக்கும் சிட்னி மைதானத்தை வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக மாற்றவேண்டும் என்று அவுஸ்ரேலிய வீரர் மெக்ஸ்வெல் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ் ரேலிய அணிகள் எதிர் வரும் நாளை மறுதினம் சிட்னியில் மோதவுள்ளன.

இறுதிப் போட்டிக்கு முன் னேறுவதற்காக இரு அணி களும் பல்வேறு வியூகங் களை தீட்டி வருகிறது. இந்நிலை யில் சிட்னி ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் வகையில் அதிகமான புற்களுடன் இருக்கவேண்டும் என்று அவுஸ்ரேலியா வெளிப்படை யாகவே கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணி யின் அதிரடி ஆட்டக்காரர் கிளைன் மெக்ஸ்வெல் கருத்து வளியிடுகையில்,அரையிறுதியின் போது வேகப்பந்து வீச்சுக்கு உகந்த ஆடுகளம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

அதற்கு ஏற்ற வகையில் ஆடுகளத்தில் கொஞ்சம் புற்களை விட்டு வைப்பார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது.

இந்த ஆண்டில் சிட்னி மைதானம் மிகச்சிறப்பானதாக இருந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார். மிட்செல் ஸ்டார்க், மிட்செல் ஜோன்சன், ஹாஸ்லேவுட், பவுல்க் னெர், ஷேன் வாட்சன் என்று அவுஸ்ரேலிய அணியில் வேகப் பந்துவீச்சு பட்டாளம் அணிவகுத்து நிற்பதால் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சிட்னி ஆடுகளம் எப்போதுமே சுழற்பந்து வீச்சுக்கு கைகொடுக்கக்கூடியது. இந்தியர்கள் சுழலில் மிரட்டக் கூடியவர்கள் என்பதால் அவுஸ்ரேலிய முகாமில் ஒரு வித பதற்றமும், பயமும் இருப்பதாக தெரிகிறது.

# டோனிக்கு சேலை ; காத்திருக்கும் இரசிகை



உலகக்கிண்ணத் தொடரின் அரையிறு தியில் இந்தியா, அவுஸ்ரேலியாவை வீழ்த்தினால் அணித் தலைவர் டோனிக்கு விசேட சேலைகளை பரிசளிக்கப் போவ தாக அரசிகை ஒரு வர் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி, தோல்விகளை சந்திக்காமல் அசத்தி வருகிறது. இந்நிலையில் நாளை மறுதினம் சிட்னியில் நடைபெறும் 2 ஆவது அரையிறுதியில் இந்தியா, அவுஸ்ரேலியாவை அதன் சொந்த மண்ணில் சந்திக்கிறது.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இதுவரை இந்தியாவும், அவுஸ்ரேலியாவும் 10 முறை மோதியதில் 7 முறை அவுஸ்ரேலியா வென்றுள்ள்து. 3 முறை மட்டுமே இந்தியா வென்றுள்ளது. எனவே இவ்விரு அணிகளின் மோதல் இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர் பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அணி இந்த போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்று இந்திய ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரை சேர்ந்த பெண் சேலை வியாபாரி ஒருவர், இந்தியா உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றால் அணித்தலைவர் டோனிக்கு தலா ரூ.65 ஆயிரம் மதிப்புள்ள சேலைகளை வழங்குவதாக கூறியுள் ளார்.

# ஹோலி மோசம் இல்லை அரையிறுதியில் அசத்துவார்

## என்கிறார் டோனி



அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் விராட் ஹோலி அசத்துவார் என்று இந்திய அணித்தலைவர் டோனி நம்பிக்கை தெரி வித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடக்க லீக் போட்டியில் சதம் அடித்த இந்திய அணியின் துணை அணித் தலைவர் விராட் கோலி, அதன் பிறகு அடுத்த 6 ஆட்டங்களில் ஒரு அரைசதம் கூட அடிக்கவில்லை.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் ஹோலி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ள நிலை யில், அவரது தடுமாற்றம் குறித்து இந்திய அணித்தலைவர் டோனி கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், டெஸ்ட் தொடரில் அவரது செயற் பாட்டை பார்த்து ஒவ்வொரு இன்னிங்சிலும் அவர் சதம் விளாச வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எப்போதுமே பெரிய வீரர்கள் முக்கியமான ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் குவிப்பார்கள். நேர்த் தியான அடிகள் மூலம் ஆதிக் கம் செலுத்தக்கூடிய துடுப்பாட் டக்காரர் ஹோலி.

விராட் கோலியின் துடுப்பாட்டம் ஒன்றும் மோச மாக இல்லை. வாய்ப்பு கிடைக்கும் போதெல் லாமல் அவர் அதிக ஓட்டங்களை குவித்து இருக்கி றார். நடப்பு உலகக்கிண்ண தொடரில் அவர் ஆட்டமிழந்தது எல்லாம் மோசமான ஷாட்டுகளால் தான் என்று நான் கருதவில்லை. அதேபோல் அவரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறு தியில் சிறப்பாக செயற்படுவார் என்று நம்புகி றேன் என்று தெரிவித்துள்ளார்.

# குட்டி இரசிகரின் வீட்டுக்கு தென்னாபிரிக்க அணி



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்கா அணி இரசிகர்களின் மனம் கவர்ந்த அணியாக திகழ்கிறது. அந்த அணியின் அணித்தலைவர் வில்லி யர்ஸ்க்கு உலகம் முழுவதும் கோடிக் கணக்கான இரசிகர்கள் இருக்கின்றனர்.

இவர் தலைமையிலான தென்னா பிரிக்க அணி இளம் வீரர்களை கண்டு பிடித்து அவர்களை ஊக்கப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

சமீபத்தில் கீரோன் ஆடம்ஸ் என்ற இளம் கிரிக்கெட் இரசிகரின் வீட்டிற்கு திடீ ரென்று சென்ற தென்னாபிரிக்க வீரர்கள் அவருக்கு இன்ப அதிர்ச்சி அளித்தனர். பின்னர் அவர்களுடன் கிரிக்கெட் விளை யாடி உற்சாகப்படுத்தினர்.

# இன்னும் 6 தினங்களில் சம்பியனாவோம்

தென்னாபிரிக்க அணியின் சிறந்த அதிரடி வீரர் மில்லர் மிடில் ஆர்டர் நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டம் தொடர்பில் கருத்து வெளி யிட்டுள்ளார்.

இந்த உலக கோப்பையில் தான் நான் முதல் முறையாக விளையாடு கிறேன். உல்க கோப்பை அரை இறுதி யில் விளையாடுவதன் மூலம் எனது கனவு நனவாகி உள்ளது.

நாங்கள் கால் இறுதியில் இலங் கையை வீழ்த்திய புத்துணர்வுடன் உள் ளோம்.

அரை இறுதியில் நியூசிலாந்தை வீழ்த்த கடுமையாக போராடுவோம். இன்னும் சில தினங்கள் எங்களது கிரிக்கெட் தொடர்ந்து சிறப்பாக இருக் கும். இதனால் இன்னும் 6 தினங்களில் நாங்கள் உலக சம்பியன் ஆவோம்.

நியூசிலாந்து வீரர் குப்ரில் இரட்டை சதம் பெற்றது எங்களுக்கு அச்சுறுத்தல் இல்லை. நான் அந்த ஆட்டத்தை பார்த்தது இல்லை.

கேள்விப்பட்டுத் தான் தெரிந்தேன். ஆனால் நாங்கள் அதைப்பற்றி பெரிதாக கவலைப்படவில்லை. எங்கள் வழியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்துவோம். இவ்வாறு மில்லர் கூறியுள்ளார்.

**உலகக் கிண்ணம் 2015**

முதலாவது

அரையிறுதிப் போட்டி

[இன்றைய ஆட்டம்]

ICC CRICKET WORLD CUP 2015

நியூசிலாந்து

எதிர்

தென்னாபிரிக்கா

இடம்- ஒக்லாந்து

நேரம்- காலை 06.30

# வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு





வவுனியா கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் வவுனியா கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பி.நடராஜ் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி எம்.பி சிவசக்தி ஆனந்தன், வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, முன்னாள் உபபீடாதிபதி தெய்வேந்திரன், வவுனியா தெற்கு உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் ஜனாப் சுபைர், வவுனியா நகரசபை செயலாளர் சத்தியசீலன், முன்னாள் வவுனியா கோட்டக்கல்வி பணிப்பாளர் பாலசிங்கம், செட்டிக்குளம் கோட்ட கல்விப்பணிப்பாளர் யேசுதன் ஆகியோரும்,

பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஓய்வுநிலை அதிபர்கள், ஆசிரியர் மத்திய நிலைய வளவாளர்கள், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், நடுவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வவுனியா கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பி.நடராஜ் தனது உரையில்,

வவுனியா கல்விக்கோட்டத்தில் 43 பாடசாலைகளைச்சேர்ந்த 20,620 மாணவர்களும், 1,384 ஆசிரியர்களும் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும், 42 பாடசாலைகள் இன்றைய போட்டியில் கலந்துகொண்டதாகவும், 20 வீதம் அளவிலான மாணவர்கள் பங்கிளித்துள்ளதாகவும் தெரிவித்ததோடு, வலயக்கல்வி பணிப்பாளர், 42 பாடசாலைகளினதும் அதிபர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்பை பாராட்டி நன்றியும் தெரிவித்தார்.

பத்து வருடங்களுக்கு பின்னர், வவுனியா கல்விக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது

(160)









பண்டாரிக்குளம்-உக்குளாங்குளம் மகளிர் அமைப்பின் 2 ஆவது வருடநிறைவை முன்னிட்டு உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வின் போது. (160-70)





யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள நிதி நிறுவனங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி கொமர்சல் கிரடிட் நிறுவனம் வெற்றி பெற்றது இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் கொமர்சல் கிரடிட் நிறுவனம் பெற்றது. வெற்றி பெற்ற அணிக்கு நல்லூர் றோட்டறிக் கழகத்தின் 2015/2016 இற்கான தலைவர் ஜனார்த்தனன் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் வெற்றி பெற்ற அணிகளுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம்.

விளையாட்டு செய்திகள்

## பொலிகண்டி இ.த.க பாடசாலைக்கு கோல் கம்பங்கள் அன்பளிப்பு



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை புலம்பெயர் தேசத்தில் வாழும் பழைய மாணவர் ஒருவர் தான் கற்ற பாடசாலையைக் கருத்தில் கொண்டு சில பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

லண்டனில் வசித்து வரும் கு.ஜெயநாதன் என்பவரே தான் கற்ற பொலிகண்டி இ.த.க. பாடசாலைக்கு கோல் கம்பங்களை அன்பளிப்பாக வழங்கியதாகவும் இவ்வாறு கம்பங்களைக் கொடுத்து உதவிய பழைய மாணவனுக்கு தாம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்தனர். (18)

# ஆபத்தான நிலையிலுள்ள அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள்

- கலாநிதி. எஸ். ஜே கீதபொன்கலன்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரும்பியோ அல்லது விரும்பாமலோ இலங்கைக்கு ஒருவித சர்வாதிகாரத் தன்மையுடன் அழைக்கப்படும் ஸ்திரத் தன்மையை வழங்கியிருந்தார், வெளிநாட்டு முதலீடுகளின் வகையில் அது நாட்டுக்கு உதவி செய்தது. சீனா மற்றும் இதர முதலீட்டாளர்கள் தங்கள் வளங்களை இந்த அமைப்புக்குள் பாய்ச்ச எண்ணினார்கள்.

எனினும் ஜனவரி 2015இல் அரசாங்கம் மாறியது, நாட்டை ஒரு ஸ்திரமற்ற தன்மைக்குள் தள்ளுவதற்கு சாத்தியமானது. பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தல் நடத்தும் பிரச்சினை பற்றிய தற்போதைய மோதலுடன் இது உண்மையாகி விட்டதைப்போலத் தோன்றுகிறது.

இப்பொழுது இயங்கிவரும் அரசியல் முறை ஒரு விசித்திரமான தொகுதி யதார்த்தங்களையும் மற்றும் தத்துவங்களையும் கொண்டுள்ளது. ஒரு சிறுபான்மை அரசாங்கம் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை தேசிய பாராளுமன்றில் அறுதிப் பெரும்பான்மையை கொண்ட கட்சி அதைப் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்படுகிறது.

இந்த சிக்கலான யதார்த்த நிலையின் ஒரு பகுதியாக, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அவரது அரசாங்கம் ஏப்ரலில் நாடாளுமன்றத்தை கலைத்து இந்த வருடம் புதிதாகத் தேர்தல்களை நடத்தவேண்டும் என விரும்புகிறது.

பாராளுமன்றில் இன்னமும் பெரும்பான்மையை கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பாராளுமன்றினைக் கலைப்பதை எதிர்க்கிறது மற்றும் அதன் தலைவர்கள் ரணில் விக்ரமசிங்கா ஏப்பிரலில் இராஜினாமா செய்தால் தாங்கள் அரசாங்கத்தை அமைக்க தயாராக உள்ளதாக அடையாளம் காட்டியுள்ளார்கள்.

பாராளுமன்றத்தை கலைக்கும் அரசியலமைப்பு அதிகாரத்தை கொண்டுள்ள ஜனாதிபதி சிறிசேன, தனது கட்சி மற்றும் தனக்கு வாக்களித்து அதிகாரத்தில் ஏற்றிய வாக்காளர்கள் ஆகியோருக்கு இடையில் ஒரு சங்கட நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியவராக உள்ளார். மோதல் தன்மையான முரண்பட்ட அறிக்கைகள் கொழும்பிலிருந்து வெளியாகின்றன.

எனவே இந்த வருடம் தேர்தல் நடைபெறுமா அல்லது பாராளுமன்றின் காலம் பூர்த்தியாகிய பின் 2016இல் தேர்தல் நடக்குமா என்கிற தெளிவற்ற நிலமையே தற்போது காணப்படுகிறது. தேர்தல் நடத்தும் காலம் கூட அதன் முடிவுகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவே இந்தப் பிரச்சினை ஒரு நிச்சயமற்ற நிலைக்கு ஒருவேளை ஒரு ஸ்திரமற்ற நிலைக்கும் முன் தள்ளுகிறது.

ஏப்ரல் அல்லது மே இற்கு அப்பாலும் தற்போது உள்ள பாராளுமன்றத்துடன் முன்னேறுவது சட்ட ரீதியானதாக இருந்த போதிலும் இன்னொருவகையில் அது சட்ட விரோதமாகவும் மற்றும் பிரச்சினையானதாகவும் தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த உடனேயே ஐ.தே.க.வுக்கு அரசாங்கத்தை அமைப்பதுக்கு ஒரு வாய்ப்பளித்தது நியாயமானதும் மற்றும் சட்டரீதியானதாவும் தெரிகிறது. ஏனெனில் மக்கள் அந்த மாற்றத்துக்கு தங்கள் ஆணையை வழங்கியிருந்தார்கள். வாக்காளர்கள் வெளிப்படையாகவே ஒரு புது நிருவாகத்தை விரும்பினார்கள்.

எனினும் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை நீண்டகாலத்துக்கு கொண்டு செல்வது நெறிமுறைக்கு ஒவ்வாதது. விசேடமாக பாராளுமன்றத்தில் இன்னமும் எதிர்க்கட்சி ஒரு தெளிவான பெரும்பான்மையை கொண்டிருக்கும் தருணத்தில். அது ஜனவரியில், ஜனநாயகத்துக்கும் மற்றும் நல்லாட்சிக்கும் வாக்காளர்கள் வழங்கிய ஆணையினைக் கேலிக்கூத்தாக மாற்றும்.

தேர்தல் 2016இல் நடந்தால் ஐ.தே.க. தனது உந்து சக்தியை இழந்துவிடும் என்பதற்கு ஏற்கனவே சாட்சிகள் உள்ளன. இதைத் தொடர்ந்து தேர்தலிலும் தோற்றுவிடும். எனவே தற்போதைய நிருவாகத்தின் விதி ஜனாதிபதி மற்றும் ஸ்ரீ.ல.சு.க என்பனவற்றிலேலேயே தங்கியுள்ளது.

பாராளுமன்றம் ஏப்ரலில் கலைக்கப்படாவிட்டால், அதிலுள்ள பிரச்சின்ன என்னவென்றால் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான காலத்தை நீட்டுவதற்கு ஏற்ப ஐ.தே.க. வெற்றி

# கே.வி. மகாதேவன்



- பி.ஜி.எஸ்.மணியன் -

63

"ஆ கலே லக் ஜா" - சஷிகபூர் - ஷர்மிளா தாகூர் - சத்ருகன் சின்ஹா ஆகியோர் நடிப்பில் வெளிவந்த ஹிந்திப் படம்.

இந்தப் படத்தை தழுவி சிவாஜி கணேசன் - மஞ்சுளா நடிக்க வி.பி. ராஜேந்திர பிரசாத் இயக்கத்தில் வெளிவந்த படம் "உத்தமன்".

கண்ணதாசன் பாடல்களை எழுத, கே.வி.மகாதேவனின் இசை அமைப்பில் டி.எம்.எஸ். - பி. சுசீலா - எஸ். பி. பாலசுப்ரமணியம் பாடல்களைப் பாடி இருந்தனர்.

"நாளை நாளை என்றிருந்தேன்" - டி.எம்.எஸ். - சுசீலா பாடிய இந்த பாடல் படத்தில் இரண்டு முறை ஒலிக்கும். உற்சாகமான டூயட் பாடலாக ஒருமுறை - சோகச் சூழலில் இன்னொரு முறை. இரண்டுமே இன்றளவும் மறக்க முடியாத பாடல்களாக காற்றலைகளில் உலா வருகின்றன.

"தேவன் வந்தாண்டீ" -டி.எம்.எஸ். - சுசீலாவின் இந்த டூயட்டும் அப்படியே.







"படகு படகு" - பாடல் எஸ்.பி.பி - பி.சுசீலாவின் இணைவில் வந்த புதிதில் வானொலியில் அடிக்கடி கேட்கப்பட்ட பாடல். தற்சமயம் ஓரளவு மறக்கப்பட்ட பாடல்.

படத்தில் இடம் பெற்ற வெகு அருமையான பாடல் என்றால் அது டி.எம். எஸ். தனித்துப் பாடும் "கனவுகளே கனவுகளே" என்ற கண்ணதாசனின் பாடல்தான்.

பாடல்கள் அனைத்தையுமே தனது திறமையால் ஹிட் பாடல்களாக்கினார் கே.வி.மகாதேவன் என்றாலும் இந்தப் பாடல் நெஞ்சைத் தொட்டது.

ஆனால் படமோ எதிர்பார்த்த வெற்றியைத் தராமல் சுமாரான அளவுக்கே போனது.

"கஜ்ஜெ பூஜா" - கன்னடத்தில் பெருவெற்றி கண்ட படம். டி.ஆர். ராமண்ணா இந்தப் படத்தை தமிழில் "தாலியா சலங்கையா" என்ற பெயரில் தயாரித்து இயக்கினார். முத்துராமன், வாணிஸ்ரீ நடித்திருந்த தேவதாசி குலத்தில் பிறந்துவிட்டு ஒரு பிராமண வாலிபனைக் கைபிடித்து ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ ஆசைப்படும் ஒரு பெண்ணின் கதை.

இந்தப் படத்திற்கு கவித்துவமான பாடல்களை கவியரசு கண்ணதாசன் எழுதி இருந்தார்.

அருமையான இசையை அள்ளிக் கொடுத்திருந்தார் கே.வி.மகாதேவன்.

"அலமேலு மங்கை அருகே திருமாலே" என்ற பாடல் பி.சுசீலாவின் இனிமையான குரலில் கேட்கக் கேட்கத் திகட்டாமல் இனிக்கும் பாடல்.

"அவன் பார்க்கும் பொது அன்னம் நிலம் பார்க்கவும்.

அரைக்கண்ணில் மாலவன் முகம் பார்க்கவும்
சிவன் பார்த்த உமை போல் முகம் நாணவும்
தங்கச் சிலையாகவும் வெட்கம் திரை போடவும்.." - கடைசி வரிகளை மெளனமாக பி.சுசீலாவின் குரல் மட்டுமே அரசாளும் வண்ணம் கே.வி. மகாதேவன் அமைத்த அற்புதமான இசைக்காகவே பாடலைக் கேட்க வேண்டும்.

"மங்கலக் கண்ணகி குங்கும ஜானகி" என்ற வாணி ஜெயராமின் பாடலும் கண்ணதாசனின் காவிய வரிகளுக்கும் மகாதேவனின் மகத்தான இசைக்கும் கட்டியம் கூறும் பாடல்.

என்ன செய்து என்ன? 1976 இல் வெளிவந்த "அன்னக்கிளி" படத்தின் மூலம் தமிழ்ப் படவுலகில் மையம் கொண்ட இளையராஜா என்னும் இளம் புயலின் ஆதிக்கத்தில் இந்த அற்புதமான பாடல்கள் எல்லாமே அடித்துச் செல்லப்பட்டதை என்னவென்று சொல்வது?

"சீதா மஹாலக்ஷ்மி" - கே.விஸ்வநாத் அவர்களின் இயக்கத்தில் சந்திரமோகன், ராமேஸ்வரி நடித்து தெலுங்கில் பெருவெற்றி பெற்ற படம். இதற்கு இசை கே.வி.மகாதேவன் தான்.

இந்தப் படத்தை தமிழில் பிரபல மலையாள இயக்குனர் கே.எஸ். சேதுமாதவன் தயாரித்தார். பி. மாதவன் இயக்கத்தில் சிவகுமார் - மறைந்த நடிகை ஷோபா நடிக்க "ஏணிப்படிகளாக" வெளிவந்தது. இதற்கும் கே.வி.மகாதேவனே தான் இசை.

"ஏனுங்க மாப்பிள்ளை இந்தச் சிரிப்பு" - எஸ். பி. பாலசுப்ரமணியம் - பி.சுசீலாவின் குரலில் ஒரு அருமையான டூயட்.

"பூந்தேனில் கலந்து" - எஸ்.பி.பாலசுப்ரமணித்தின் குரலில் ஒருமுறையும், பி.சுசீலாவின் குரலில் இன்னொரு முறையும் ஒலிக்கும் பாடல். இன்றளவும் மறக்கவோ மறைக்கவோ முடியாத அற்புதப் பாடலாக நிலைத்திருக்கிறது. கவியரசு கண்ணதாசன் - கே.வி.மகாதேவனின் தன்னிகரில்லாத திறமைக்கு கட்டியம் கூறிக் கொண்டிருக்கும் பாடல் இது.

தொடர்ந்து வெளிவந்த ஏ.சி. திருலோகசந்தரின் இயக்கத்தில் சிவகுமார், ரத்தி அக்னிஹோத்ரி நடித்த "காதல் கிளிகள்" படத்தில் "காதல் கிளியே நீ ஏன் பேசமறந்தாய்" என்ற எஸ். பி.பாலசுப்ரமணியம் பாடும் பாடலை நன்றாகத் தான் கொடுத்திருந்தார் கே.வி.மகாதேவன். என்றாலும் ஏற்கனவே சொன்னமாதிரி இளையராஜாவின் ஆளுமை ஒரு ஒக்டோபஸ் போல தமிழ்த் திரை உலகை ஆக்கிரமிக்க ஆரம்பித்ததால் எடுபடாமல் போனது.

கே.வி.மகாதேவன் என்ற ஒரு இசை அமைப்பாளரையே கிட்டத்தட்ட தமிழ்த் திரை உலகம் மறந்து விட்டதோ என்று நினைக்கக் கூடிய காலகட்டம்..

அந்த நேரத்தில் அவருக்கு கைகொடுக்க வந்தது ஒரு தெலுங்குப் படம்.

ஆந்திர தேசத்தைத் தாண்டி தமிழகத்திலும் மறக்க முடியாத வெற்றியை கொடுத்து அவருக்கான சிம்மாசனம் என்றுமே யாராலுமே அசைக்க முடியாத ஒன்று என்று நிரூபித்த படம் அது.

அதுதான் "சங்கராபரணம்"..

(தொடரும்)

பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஆசனங்களின் எண்ணிக்கை குறைவடையும். ஐ.தே.க. தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்று ஆவல் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

அதே நேரம் எதிர்க்கட்சியில் இருந்து தேர்தலை எதிர்கொள்வதை விட காபந்து அரசாங்கத்தில் இருக்கும்போதே தேர்தலை எதிர்கொள்வதினால், அரச வளங்களின் ஆதாயங்களை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஐ.தே.க. வுக்கு உள்ள இரண்டாவது தெரிவு, பாராளுமன்றம் ஏப்ரலில் கலைக்கப்படாவிட்டால் ராஜினாமா செய்வது. அப்போது ஜனாதிபதி அரசாங்கத்தை அமைக்கும்படி ஸ்ரீ.ல.சு.க வினை அழைப்பார். இது முற்றும் சட்ட ரீதியானது, ஆனால் கொள்கையற்றது. ஸ்ரீ.ல.சு.க ஒரு அரசாங்கத்தை அமைக்க விரும்பினால் அது ஒரு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வரவேண்டும்.

வெளிப்படையாகவே ஸ்ரீ.ல.சு.க ஒரு தாமதமான தேர்தலையே விரும்புகிறது ஏனென்றால் அதற்கு ஐ.தே.க. வின் மதிப்பைக் குறைத்து அதனால் வாக்குறுதி அளித்தபடி ஒரு கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தி நிவாரணம் வழங்க முடியாது என மக்களை நம்ப வைப்பதற்கு போதிய கால அவகாசம் தேவைப்படுகிறது.

இறுதியாக பாராளுமன்றத்தை ஏப்ரலில் கலைப்பதா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. பாராளுமன்ற கலைப்பை தாமதப் படுத்துவது மறைமுகமாக அவரது கட்சியான ஸ்ரீ.ல.சு.க இற்கு அதன் எண்ணங்கள் ஈடேற உதவும். ஆனால் அவருக்கு வாக்களித்த மக்கள் மற்றும் ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றி பெற உதவிய கூட்டணி ஆகியவற்றுக்கும் அவர் பொறுப்புக்கூற கடமைப்படுள்ளார். தற்சமயம் அவர் எதிர்நோக்கும் சங்கடமான நிலை இதுதான்.

ஜனவரி தேர்தலில் மக்கள் வெளிப்படுத்திய உறுதிக்கு மதிப்பளிப்பது என்பது அவரது தீர்மானமாக இருந்தால், அவர் 100 நாட்களின் பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து ஒரு சட்டபூர்வமான அரசாங்கத்தை தெரிவு செய்ய மக்களை அனுமதிக்க வேண்டும். ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஏப்ரல் அல்லது மே யில் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.




## சுவர்த் தத்துவங்கள்

**[மருந்துக் கடையில்]**
வயதாகிவிட்டதே என்று வருந்தாதே.
நிறையப் பேருக்கு அந்த வாய்ப்பே
கிடைப்பதில்லை.

**[வாடகைக் காரின் பின்புறத்தில்]**
நண்பன் எதிரி ஆனால்
நிம்மதி இருக்காது;
எதிரி நண்பன் ஆனால்
நம்பிக்கை இருக்காது.

**[ஓட்டோவின் பின்புறத்தில்]**
பிறரின் முதுகுக்குப் பின்னால்
செய்ய வேண்டிய வேலை,
ஒன்றே ஒன்றுதான்...
அது...
தட்டிக் கொடுப்பது.

**[ஆசிரியர் இல்ல கரும்பலகையில்]**
விழிப்பதற்கே தூக்கம்
வெல்வதற்கே தோல்வி
எழுவதற்கு வீழ்ச்சி.

**[பள்ளிக்கூட அறிப்பு பலகையில்]**
பரீட்சையை விளையாட்டாய் நினை;
விளையாட்டைப் பரீட்சையாய் நினை;
இரண்டிலும் வெற்றி கிட்டும்.

**[ஆசிரியர் வீட்டில்]**
அன்பு துன்பம் நீக்கும்
சிரிப்பு நோய் நீக்கும்
சேமிப்பு வறுமை நீக்கும்

**[கோவிலில்]**
மனதில் தூய்மையுள்ளவர்கள்
குப்பைத் தொட்டியில் போடுங்கள்...
மனதில் குப்பையுள்ளவர்கள் ஆலய
வளாகத்தில் போடுங்கள்

**[நூலகத்தில்]**
பொருட்களைப் பயன்படுத்து - அன்பு செய்யாதே
மனிதர்களிடம் அன்பு செலுத்து - பயன்படுத்தாதே.

**[போக்குவரத்து நிறுவன வாயிலில்]**
நல்ல நேரம் - 24 மணி நேரமும்
கெட்ட நேரம் - உழைக்காத நேரம்

**[தனியார் மருத்துவமனை ஒன்றில்]**
ஒல்லியானவர்களுக்கு: Don't eat fast (வேகமாக உண்ணாதே)
குண்டானவர்களுக்கு: Don't eat, fast (உண்ணாதே, பட்டினி கிட)

**[ஒரு உணவகத்தின் பலகையில்]**
எங்கள் வாடிக்கையாளர்களே
எங்களின் விளம்பரதாரர்கள்.

**[பலசரக்குக் கடை ஒன்றில்]**
அனுபவத்தால் பெற வேண்டிய ஒன்றை
ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் கொடுக்க முடியாது.

**[ஒரு கடைச் சுவரில்]**
கோபத்தோடு எழுந்திருப்பவன்
நஷ்டத்தோடு உட்கார்வான்

**[ரீ-ஷேர்ட் ஒன்றில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததன் தமிழாக்கம்]**
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் - 400 கி.மீ.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு - 400 கி.மீ.
தரைத்தளத்திலிருந்து 15 ஆவது மாடி - 15 மாடிகள்
15 ஆவது மாடியிலிருந்து தரைத்தளம் - 15 மாடிகள்
ஆனால்,
திங்கள்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை - 5 நாட்கள்
வெள்ளிக்கிழமையிலிருந்து திங்கள்கிழமை - 4 நாட்கள்
இதென்ன ஏமாற்று வேலை?.

# மீண்டும் நர்கீஸ்!

அந்தக்கால பிரபல ஹிந்தி நடிகை நர்கீஸ், தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சஞ்சய் தத்தின் அம்மாவும், மறைந்த நடிகரும், எம்.பி.யுமான சுனில் தத்தின் மனைவியுமாவார். அழகிலும், நடிப்பிலும் முன்னணியில் இருந்தவர் நர்கீஸ். தற்போது, இவரின் பெயரில், ஒரு அழகி, பொலிவுட்டில் களமிறங்கி உள்ளார். ஹொலிவுட்டில் இருந்து வந்துள்ள இந்த இளம் நடிகையின் பெயர் நர்கீஸ் பக்ரி. தந்தை பாகிஸ்தானை சேர்ந்தவர், தாய் ஸ்லோவேக்கியா நாட்டுக்காரர். நியூயோர்க்கில் பிறந்து வளர்ந்த நர்கீஸ், யோகா உட்பட அனைத்து வித்தைகளையும் கற்று, உடலை கட்டுக்கோப்பாக வைத்துள்ளார்.

"இங்குள்ள வாழ்க்கை முறையும், இங்குள்ள குடும்ப அமைப்பும் ஆச்சரியமளிக்கிறது. அமெரிக்காவில், 17, 18 வயதிலேயே பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி விடுவர். ஆனால் இங்கு, சத்தமாகப் பேசும் பெண்களையும், அதேசமயம், பெண்களின் சுதந்திரமில்லா வாழ்க்கையையும் பார்த்து வியக்கிறேன்..." என்கிறார். கிக் படத்தில் கவர்ச்சி நடனம் ஆடும் இவரை, அறிமுகப்படுத்தியவர், சல்மான் கான்!



# திருடி; ஆனாலும் பேரழகி!

உலகில் உள்ள ஏராளமான இளைஞர்களை தன் அழகாலும் செயலாலும் கதிகலங்க வைத்துள்ளார் பேரழகி ஸ்டெபானி. அப்படியானால் இவர் ஒரு ஹொலிவுட் நடிகையா? இல்லை; இவர், ஒரு திருடி! கனடாவிலுள்ள விக்டோரியா வில்லாவில், 42 வீடுகளின் பூட்டை உடைத்து, பொருட்களை அள்ளிச் சென்றுள்ள இந்த அழகியை தற்போது, பொலிசார் கைது செய்து சிறையில் தள்ளியுள்ளனர்.

இவரை பேஸ்புக்கில் பார்த்து மயங்கிக் கிடக்கின்றனர் இளைஞர்கள். அவர்களில் ஒருவர் பேஸ்புக்கில், "அழகி ஸ்டெபானி வாங்க... வந்து என் வீட்டில உள்ள பொருட்களை கொள்ளை அடிச்சிட்டுப் போங்க..." என்று கூறியுள்ளார். இன்னொருவர் "எங்கள் நாட்டுக்கு வாங்க... வந்து கட்சியிலே சேருங்க... உங்க திறமைக்கு எங்கேயோ போயிடுவீங்க..." என்று அழைத்திருக்கிறார். இப்படி ஏராளமான கமென்ட்கள், இந்த திருட்டு அழகிக்கு வந்து கொண்டுள்ளன.





# கதைகேளு... கதைகேளு

வயல்கள் நிறைந்த வயலூர் கிராமத்திற்கு வந்து சேர்ந்தது ஒரு பூம்... பூம் மாட்டுக்காரர் கூட்டம்.

ஊருக்கு ஒதுக்குப்புறமாய் உள்ள மலையடிவாரத்தில், புளியமர நிழலில் கூடாரங்கள் உருவாயின.

சோறாக்கிச் சாப்பிட சில பாத்திரங்கள், சின்ன நாதஸ்வரம், உறுமி மேளம், சிறிய துணி மூட்டை, தலையாட்டுவதற்கு ஒரு மாடு இவ்வளவுதான் அவர்கள் சொத்து.

பக்கத்துக் கிராமத்திலிருந்து நடந்து வந்த களைப்பில், மாட்டை மரத்தடியில் கட்டிவிட்டுப் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர், பூம் பூம் மாட்டுக்காரர்கள்.

சூரியன் மேற்கில் மறையும் நேரம், வயலில் உழவனோடு சேர்ந்து உழைத்து விட்டுச் சேறு படிந்த உடம்புடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த சிவலைக் காளை அந்த வழியே வந்தது.

கொம்புகள் இரண்டும் அலங்கரிக்கப்பட்டு குஞ்சம் தொங்க, முதுகில் உள்ள திமிலில் கரடித் தோல் பளபளக்க, உடம்பில் வண்ண வண்ணத் துணிகள் தொங்க, கழுத்திலும், பின்புறத்திலும் மணிகள் ஆட, நெற்றியில் வெங்கடேசப் பெருமாளின் உருவம் பொறித்த துணி தொங்க, அலங்கரிக்கப்பட்ட புது மாப்பிள்ளை போல் மரத்தடியிலிருந்து பூம்பூம் மாட்டைப் பிரமிப்புடன் நோக்கிய சிவலைக்காளை. அருகில் சென்று பார்த்து வருவோம் என நெருங்கியது. இது, அருகே வந்ததும், முட்டித்தள்ள முனைந்தது பூம் பூம் மாடு.

ஏய்! நீயும் என்னைப் போல மாடு தானே?... இவ்வளவு அலங்காரமா இருக்கிறாயேன்னு பாக்க வந்தா, முட்ட வர்றியே! என்று ஆற்றாமையுடன் கேட்டது, சிவலைக்காளை.

நான் சாமி மாடு! உடம்பு முழுக்க சேத்தைப் பூசிக்கிட்டு என் பக்கத்திலே வர்றியே...! சீ....சீ., தூரமாப் போ! என்றது பெருமாள் மாடு.

ஓகோ! உடம்புல சேறு ஒட்டியிருக்கிறதாலே எட்டிப் போகச் சொல்றியா? காலையிலே இருந்து பொழுது சாயிற வரை உழவனோடு சேர்ந்து வயலிலே உழைச்சிட்டு வர்ற என் உடம்புல சேறுதான் இருக்கும். சந்தனமா பூசிக்கிட்டு வர முடியும்? உழைக்கிற நான் உனக்குக் கேவல்மாத் தெரியறேனா?





என்ன இருந்தாலும் நீ மட்டம், நான் உசத்தி! என உரத்த குரலில் சொன்னது பூம்பூம் மாடு.

ஓகோ... நெத்தியிலே சாமிப் படத்தை மாட்டிக்கிட்டு, ஊரெல்லாம் சுத்திச் சுத்தி தலையாட்டிப் பிச்சையெடுக்கிற நீ சாமிமாடு! உழைக்கிற நான் கேவலம்.. ஊரைச்சுத்திப் பிச்சையெடுக்கிற நீ உசத்தி! உழுபடையா வேலை செய்யிற நான் மட்டமா? என்ன நியாயம் இது?

என் உடம்புலே ஒட்டி இருக்கிற சேறு, உழைக்கும்போது பட்டது. உன் உடம்புலே கட்டி இருக்கிற எல்லாமே, ஊரைச் சுத்தியபோது மத்தவங்க பிச்சையாப் போட்டது.

ஊருக்கெல்லாம் சோறு கொடுக்கிற விவசாயியோடு சேர்ந்து நான் உண்மையா உழைக்கிறேன். முதல்லே நிலத்திலே ஏரு பூட்டி ஓட்டுறதுலே இருந்து, பயிரை வளர்த்துக் கடைசியா பிணையடிக்கிற வுரையிலே கூட இருந்து பாடுபடறேன். அதனாலே அறுப்பறுத்து அடிச்சுக் கீழே விழுந்த நெல்மணிகளை அவுங்க எடுத்துக்



கிட்டு, வைக்கோலை எனக்குத் தருவாங்க.

நெல்லை எடுத்துக் குத்திப் புடைச்சுத் தவிட்டை எனக்குத் தருவாங்க. அரிசி கழுவிய தண்ணியை எனக்குத் தருவாங்க. அரிசி வெந்து சோறானதும் வடி கஞ்சியை எனக்குத் தந்துட்டு, சோத்தை அவுங்க சாப்பிடுவாங்க.

ஆனா, நீ வீடு வீடாய்ப் போய் வாசலிலே நின்னு அம்மா பட்டுப் புடவை கொடுப்பாங்களா? பூம்..பூம்..பூம்.. அய்யா பட்டு வேட்டி கொடுப்பாங்களா? பூம்..பூம் ..பூம்.ன்னு உன்னை வச்சிப் பிழைக்கிறவன் அடிக்கிற உறுமிச் சத்தத்துக்கு ஏத்த மாதிரி தலையாட்டி அவங்க போடுற பழைய சோத்துக்கும், கிழிஞ்ச துணிக்கும், சில்லரைக் காசுக்கும் ஏங்கணும்.

அதெல்லாம் கிடைச்சாலும் உனக்கென்ன பயன்? உன்னை வெச்சுப் பிழைக்கிறவனுக்குத்தான் லாபம்.

கடினமா உழைக்கிற மனிதரை மாடு மாதிரி, உழைக்கிறான்னு பாராட்டக் கேட்டிருக்கேன். ஆனா நீயோ உழைக்காம அடுத்தவனை ஏமாத்திப் பிழைக்கிற மனிதனைப் போல நடந்துக்கிறதனாலே மனிதன் மாதிரி பிழைக்கிறேன்னு சொல்ற அளவு நடந்துக்கிட்டியே!

அதை நினைச்சாதான் எனக்கு வருத்த மாயிருக்கு! என ஆவேசமாக முழங்கியது சிவலைக்காளை.

ஊருலே, எல்லாரும் என்னைத் தொட்டு வணங்குறாங்க, தெரியுமா? மீண்டும் மிடுக்காகப் பேசியது பெருமாள் மாடு.

அதை ஏளனமாய்ப் பார்த்த சிவலைக் காளை, உன்னை எல்லோரும் தொட்டு வணங்கிறதுனாலேயே நீ பெரிய ஆளுன்னு நினைக்காதே! பதவியிலே இருக்கும் போது காலில் விழுந்து வணங்குறதும், பதவி போனதும் காலில் போட்டு மிதிக் கிறதும் மனிதர்களின் குணம்!

அதே மாதிரி, உன் நெத்தியிலே இருக்கிற சாமிப் படத்தைக் கழட்டிட்டு, உன் அலங்காரத்தைக் கலைச்சுட்டு ஊருக்குள்ளே போயி ஒரு வீட்டு முன்னால நின்னு பாரு.


உன்னை யாரும் தொட்டு வணங்க மாட்டாங்க. துரத்தித்தான் அடிப்பாங்க! உழைப்பால் கிடைக்கிற மதிப்புதான் உண்மையான மதிப்பு. உன் வேடத்தினாலே கிடைக்கிற எதுவுமே உனக்கில்லே. அது நிலைக்கவும் நிலைக்காது, தெரிஞ்சுக்க! என்று கூறியபடி சிவலைக் காள்ள தன் வழியே சென்றது.

அதன் வார்த்தை ஒவ்வொன்றும், மீண்டும் மீண்டும் பெருமாள் மாட்டின் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு...


அப்படியானால், சாமி மாட்டுக்கு?

# மகாமடையர்



மார்க்டுவைன் என்ற நகைச்சுவை எழுத்தாளர் தனது ஆரம்ப காலத்தில் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் குழுவில் 6 மாதங்கள் பணியாற்றினார். ஒருநாள் ஆசிரியர் டுவைனை அழைத்து, இனி நீங்கள் வேலைக்கு வரத் தேவையில்லை என்று கூறியுள்ளார். இதனைக் கேட்ட டுவைன், ஏன்? என்று கேட்டுள்ளார். நீ ஒரு சோம்பேறி, ஒன்றுக்கும் உதவாதவன் என்று கூறியதும், நீங்கள் ஒரு மகா மடையர் என்றாராம், டுவைன். ஆசிரியரின் திகைப்பைப் பார்த்ததும், நான் ஒர் உதவாக்கரை என்பதைத் தெரிய உங்களுக்கு 6 மாதங்கள் தேவைப்பட்டுள்ளன. இது அப்போதே எனக்குத் தெரியும்! என்றாராம் டுவைன்.

# எண்ணிப்பார் ஏழு வேறுபாடு



## சென்றவாரம் பிரசுரமாகிய பொதுஅறிவு வினாக்களின் விடைகள்

1. டோக்கோ மீற்ற்
2. பான்டிங் 3.70%
4. அரிஸ்டாட்டில்
5. வேர்கள்
6. 1

# தவறான வழியில் மக்களை வழிநடாத்துவது

# அரசியல் வாதிகளின் திட்டமிட்ட செயற்பாடு

## ஈ.பி.டி.பி. உடுவில் தொகுதி செயற்பாட்டாளர்கள் தெரிவிப்பு





பக்கச்சார்பாகவும் உண்மைக்குப் புறம்பாகவும் செய்திகளை பரப்பி சிலர் மக்களை தவறாக வழி நடாத்துகின்றனர் என ஈ.பி.டி.பியின் உடுவில் தொகுதி செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

"உண்மையான மாற்றம்" என்ற தொனிப்பொருளில் தொகுதிவாரியாக கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் தொடர்ச்சியாக உடுவில் தொகுதிக்கான (சுன்னாகம்) சந்திப்பின் போதே செயற்பாட்டாளர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதன்போது சமகால அரசியல் நிலவரம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக உண்மைக்கு புறம்பானதாகவும் பக்கச்சார்பானதாகவும் சிலர் செய்திகளை பரப்பி வருகின்றனர்.

இதனால் உண்மையான செய்திகளை மக்கள் அறிய முடியாத அவல நிலை உள்ளதாகவும் அது மட்டுமன்றி மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

இதில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும் போது நாம் எமது மக்களுக்காக ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கியதான கருத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை முன்னெடுப்பது மட்டுமன்றி இனிவரும் காலங்களிலும் அவ்வாறே தொடரவேண்டும். அதற்காக செயற்பாட்டாளர்கள் மக்களுடன் நின்று மக்களுக்கான சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

முன்னைய அரசின் காலப்பகுதியில் அரசுடனான இணக்க அரசியல் மூலமாக படைத்தரப்பினரிடமிருந்த மக்களுக்குச் சொந்தமான வீடுகள், காணிகள் பொது இடங்கள் பலவற்றை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் மக்களுக்கு மீளப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

அத்துடன், சுன்னாகத்தில் நிலத்தடி நீரின் மாசுத்தன்மை, ஏழாலை பாடசாலை தண்ணீர் தாங்கியில் நஞ்சுத்திராவகம் கலக்கப்பட்டமை, ஈ.பி.டி.பியின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக செயற்பாட்டாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவை தொடர்பிலான விளக்கங்களையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் வலி தெற்கு பிரதேச அமைப்பாளர் வலன்ரைன், பிரதி அமைப்பாளர் அரிகரன், மற்றும் ஈ.பி.டி.பி.யின் பிரதேச சபை உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகளை அமைக்க ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

தற்போது உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இவை முழுமையாக விடுவிக்கப்படும் என்று அரசாங்கம் கூறிவருகிறது. நாம். விடுவிக்கின்ற பகுதிகளில் பாடசாலைகளை இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ஒஸ்மானியாக் கல்லூரியில் வகுப்பறைக் கட்டடத்தொகுதிகளைத் திறந்து வைத்து உரைநிகழ்த்தும் போதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (63, 10)

## சேவை நலன் பாராட்டு விழா

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய அழகியல்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விமலா தேவி நாகேஸ்வரனின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை மறுதினம் பி.ப. 2 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவினை வலிகாமம் கல்வி வலய இசைத்துறை ஆசிரியர்களும், பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

விழாவில் விழா நாயகி மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு, பரிசுப் பொருட்கள் வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்படவுள்ளார். என இசையாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (06)

## செவ்விளநீருக்கான கிராக்கி யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள வெப்பநிலையால் செவ்விளநீருக்கான கிராக்கி அதிகரித்துக்காணப்படுவதுடன் வியாபாரிகள் பலர் வீதிகளில் வைத்து செவ்விளநீர் விற்பனை செய்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் யாழ். குடாநாட்டில் தற்போது வெப்பநிலை அதிகரித்துள்ளதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நோயின் தாக்கத்துக்கு உள்ளாகி வருவதுடன் ஏனையவர்களும் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இவர்களின் வெப்பத்தைக் குறைப்பதற்கும், தாகத்தைத் தீர்ப்பதற்குமாக வீதிகளில் வைத்து செவ்விளநீர் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தற்போதைய காலநிலையின் காரணமாக செவ்விளநீருக்கான கிராக்கி அதிகரித்துக்காணப்படுவதுடன் ஒன்றின் விலை 60 ரூபா முதல் 80ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாக தொவிக்கப்படுகின்றது. (66)

## நீண்டநேரம் வங்கியில் காத்திருக்கும் மக்கள்

வடமராட்சி நெல்லியடியில் இயங்கி வரும் அரச வங்கி கிளையொன்றுக்கு வருகைதரும் மக்கள் பாரிய நெருக்கடிகளைச் சந்திப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வங்கியானது இது வரை காலமும் மூன்று காசாளா பகுதிகளைக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றி வந்தது இதனால் மக்கள் தமது தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்யக் கூடியதாக காணப்பட்டது.

ஆனால் காசாளர் பகுதிகளின் எண்ணிக்கை ஒன்றாக குறைக்கப்பட்டு சேவை வழங்கப்படுகிறது. இதன் காரணமாக வங்கிக்கு வரும். மக்கள் ஒரு காசளர்பகுதியில் மட்டும் சென்று தேவைகளை நிறை வேற்றுவதால் பாரிய நெருக் கடிகளை சந்திப்பதாக விசனம் தெரி விக்கின்றனர். மேலும் வங்கியில் பணிபுரியும் ஊழியர்கள் மதிய உணவிற்கு செல்வதனாலும் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. எனவே இது தொடர்பாக வங கியினர் உரிய கவனம் எடுக்கவேண்டுமென வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

இன ரீதியான பிளவுக்கான காரணமாக தென்படும் தீவிர தேசியத்துவ வாதம் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் நாட்டின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் மீண்டும் தலை காட்டத் தொடங்கியுள்ளன. எதிரணியினரது நுகேகொடை பிரசாரக் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்ட பிரதான கருத்து ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களது வாக்குகளில் பெருமளவானவை முன்னாள் ஜனாதிபதிக்கே கிடைத்துள்ளன என்பதாகும். அடுத்தது புதிய அரசாங்கம் நாட்டை இன ரீதியான பிரிவினைக்கு இட்டுச் செல்கின்றது என்றும் அதனால் சிங்கள மக்கள் காட்டிக்கொடுக்கப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது. இதற்கு இப் புதிய அரசாங்கம் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினரது வாக்குகளில் தங்கியிருப்பது காரணமாகும் என்றும் காரணங்காட்டப்பட்டது. மறுபுறத்தில் வட மாகாண சபையில் இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பில் ஈடுபடுவதாகவும் அதனால் ஐ.நா.சபை இது தொடர்பில் பரிசீலனை செய்து விசாரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை வட பகுதி தீவிரவாத தேசியத்துவத்தின் பிரதிபலிப்பாகும்.

**– கலாநிதி ஜெகான் பெரேரா**

தமிழ் தேசியவாதிகளின் அரசியல் அவர்களின் எந்த ஒரு நோக்கத்தையும் சுயேச்சையாக அடைவதில் வெற்றி பெறவில்லை என்பதுதான். ஒருபுறம் அது தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி, ரி.யு.எல்.எப்.அல்லது ரி.என்.ஏ.எதுவானாலும் சரி, மறுபுறத்தில் எல்.ரீ.ரீ.ஈ. உட்பட்ட தமிழ் போராளிக் குழுக்களானாலும் சரி அவர்கள் அனைவருமே இதுவரை தோல்வியே அடைந்துள்ளார்கள். இதில் தனித்த ஆதாயமாக காணப்படுவது இந்திய – இலங்கை ஒப்பந்தம் கொண்டுவந்த 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் மட்டுமே.

அரசியல் முன்னணி இந்த தோல்வியை அடைந்த போதிலும், தமிழ்த்தேசியவாதிகளின் கட்சிகள் மற்றும் அமைப்புகள், தொடர்ந்தும் உச்ச நிலையிலேயே ஆட்சி செய்தன. தமிழ்த்தேசியவாதிகளின் அரசியலில் உள்ள தமிழ் ஆட்சியாளரின் இந்த ஏகபோக கட்டுப்பாட்டுக்கு அருகில் உள்ள முக்கிய கருவியாக பயன்படுவது 'துரோகத்தனமான நடவழக்கை' என்ற பட்டமளிப்புத்தான். தங்களால் வழங்க முடியாது தோற்றுப் போகும் எதற்கும் இந்த துரோகத்தனம் என்கிற சமாதானத்தை கூறி தப்பிவிடுவார்கள். யதார்த்தமற்ற மற்றும் அடையமுடியாத இலக்குகளுக்கு அரசியல் முட்டாள்தனம்தான் காரணம் என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை மாறாக எங்கள் மத்தியில் உள்ள துரோகிகள்மீது தவறுகள் சுமத்தப்படுகின்றன. தமிழர்களுக்கு சொல்லப்படுவது தவறுகள் எங்களுடையது அல்ல துரோகிகளுடையது என்று.

**– டி.பி.எஸ்.ஜெயராஜ்**

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டிருந்தது. கூட்டணியின் குரலாக விளங்கிய 'சுதந்திரன்' பத்திரிகை கூட்டணியின் போக்கை கடுமையாகச் சாடத் தொடங்கியது. 'சுதந்திரன்' பத்திரிகை தந்தை செல்வநாயகத்தின் மறைவின் பின்னர் அவரது மகன் சந்திரகாசனின் பொறுப்பில் இருந்தது.

'சுதந்திரன்' பத்திரிகைக்கு போட்டியாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பத்திரிகை வெளியிட முன்வந்தது. கூட்டணியின் உத்தியோகபூர்வ பத்திரிகை என்ற அறிவிப்போடு 'உதயசூரியன்' வெளியிடப்பட்டது. 'சுதந்திரன்' பத்திரிகையின் பிரசாரத்தை முறியடிப்பதே அதன் நோக்கமாக இருந்தது. ஆனாலும் 'சுதந்திரன்' பத்திரிகையோடு 'உதயசூரியனால்' போட்டி போட முடியவில்லை.

உதயசூரியன் பத்திரிகையிலே 'பறவைகளே.... பறவைகளே' என்ற தலைப்போடு ஆசிரியர் தலையங்கம் வெளிவரும். சுதந்திரனில் அதன் ஆசிரியராக இருந்த கோவை மகேசன் எழுதும் அரசியல் மடலுக்கு 'பறவைகளே.... பறவைகளே' என்ற தலையங்கத்தின் கீழ் உதயசூரியனில் பதில் வரும்.

"சோறு வேண்டாம். சுதந்திரமே வேண்டும். பாலம் வேண்டாம். ஈழமே வேண்டும்." என்று சுதந்திரனில் கருத்து வெளியிடப்படும். அதற்கு உதயசூரியன் பின்வருமாறு பதில் சொல்லும்:

"பறவைகளே.... பறவைகளே.... எங்களுக்கு சோறும் வேண்டும். சுதந்திரமும் வேண்டும்" "எங்களுக்கு பாலமும் வேண்டும். அந்தப் பாலத்தை வைத்தே ஈழம் உருவாக்கும் விவேகமும் வேண்டும்." என்ற ரீதியில் பதில் சொல்லப்படும்.

சுவையான பதில் தான். ஆனால் சோறும் வேண்டும் என்று சொன்னவர்களை துரோகிகள், "எட்டப்பர்கள்" என்று முன்னர் வசை பாடியவர்களும் தாங்களே என்பதைக் கூட்டணியினர் மறந்து போனது தான் வேடிக்கை.

**– அற்புதன் எழுதிய வரலாற்றுத் தொடரில்**

# கடற்படை, விமானப்படை தளபதிகளையும் கௌரவப்படுத்துவோம்

## ஐ.தே.க. பொதுச் செயலாளர்



(கொழும்பு)

போரை முடிவுக்குக் கொண்டு வர பங்களிப்புச் செய்த கடற்படை மற்றும் விமானப் படைத் தளபதிகளையும் கௌரவப்படுத்துவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் கடமையாற்றிய கடற்படை மற்றும் விமானப்படை தளபதிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப்படும்.

சரத் பொன்சேகா அப்போதைய அரசாங்கத்தினால் நெருக்குதல்களுக்கு இலக்கானவர். விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிர் பிழைத்தவர். இவ்வாறான ஒருவருக்கு பதவிகளையும் வரப்பிரசாதங்களையும் வழங்குவதனை மக்கள் எதிர்க்கவில்லை.

போரை முடிவுக்குக் கொண்டு வர பங்களிப்புச் செய்த கடற்படை மற்றும் விமானப் படை தளபதிகளை அரசாங்கம் மறந்து விடாது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக்க மற்றும் உயர் படையதிகாரிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும் என சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# ஜூன் மாதம் பொதுத் தேர்தல் சாத்தியக் கூறுகள் இல்லை

## பிரதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆரூடம்

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதை தொடர்ந்து அரசியல் சட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக கால அவகாசம் தேவை என்பதனால் எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என தொழிலாளர் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் பதவியேற்றதன் பின்னர் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைககப்படுவதற்கான வாய்ப்புகள்



இல்லை, அதற்கு முன்னர் நாங்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஏராளமுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத் திட்டத்தில் உள்ளடங்கிய நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை குறைத்தல், மற்றும் தேர்தல் முறைமையில் மாற்றம் உள்ளிட்ட பல காரியங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே பொதுத் தேர்தல் நடாத்துவதற்கான தினம் தீர்மானிக்கப்படும் என தொழிலாளர் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

# காணிப்பிரச்சினைகளை தீர்க்க விசேட செயலணி உருவாகும்

## பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் காணி பிரச்சினைகளை விசாரணை செய்து, அவற்றுக்கு உரிய நிவாரணங்களை வழங்க அதிகாரமிக்க விசேட செயலணி ஒன்றை அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.


அடுத்த வாரம் செயலணியினை அமைக்கும் பணியை தான் செய்யப் போவதாகவும் அது பற்றி கலந்தாலோசிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலியை தொடர்பு கொள்வதாகவும் பிரதமர் உறுதியளித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாது தொடர்ந்து வந்த 21 காணிகள் தொடர்பான ஆவணங்களை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் பிரதமரிடம் நாடாளுமன்றத்தில் வைத்து ஏற்கனவே ஒப்படைத்திருந்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இது போன்று தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகள் சம்பந்தமான ஆவணங்கள் தற்போது தயாராகி விட்டதனால் அடுத்தவாரம் விசேட செயலணி அமைக்கும் போது அவை சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த ஆவணங்களில் உள்ள விபரங்களை தற்போதுள்ள நிலவரங்களுக்கு ஏற்றவாறு மீளாய்வு செய்து புதிய தகவல்களையும் உள்ளடக்கியதான ஆவணங்களே தற்போது பிரதமரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இவ் ஆவணங்களைப்



பரிசீலித்து நியாயமான தீர்வுகளை வழங்குவதற்காக சகல அதிகாரம் பொருந்திய ஒரு விசேட செயலணியை அமைக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதமரைக் கேட்டிருந்தது.

அரசியல் மற்றும் இனவாத நோக்குடன் கிழக்கு மாகாணத்தில் கடமை புரிந்த உயர் அதிகாரிகள் யுத்த பின்னணியை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இக் காணிப் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்காது இழுத்தடித்து வந்துள்ளனர்.

இவ்வாறான அவலநிலையைக் காரணமாகக் காட்டியே விசேட செயலணியை அமைத்துத் தருமாறும் 100 நாள் வேலைத்திட்டத்திற்குள் இதனை அமுல்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

# சிகிரியாவை பார்வையிடச் செல்லும் தமிழ் சுற்றுலாப்பயணிகள் வீழ்ச்சி

## பிரதேச வர்த்தகர்கள் கவலை

சிகிரியாவை பார்வையிடச் செல்லும் தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறித்த பிரதேச வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

சிகிரியா குன்றுக்குச் செல்லும நுழைவாயிலுக்கு அருகாமையில் காணப்படும் வாகனத் தரிப்பிடத்தை மையமாகக் கொண்டு இயங்கி வரும் வர்த்தகர்களே இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக சிகிரியா செல்லும் தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதி சிகிரியா கண்ணாடிச சுவரில் கிறுக்கியமைக்காக இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இவ்வாறு தமிழர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலான சட்ட திட்டங்கள் பற்றி போதிய தெளிவின்மை காரணமாக, தமிழ் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவியர் ஐயம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது வருமானத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# 4 வகை கறிகளுடன் 50 ரூபாவுக்கு சோற்றுப்பொதி

(கொழும்பு)

நான்கு வகைகளிலான கறிகளுடன் 50 ரூபாவிற்கு சோற்றுப் பொதிகள் வழங்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முதல் 50 ரூபாவிற்கு சோற்றுப் பொதிகளை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று முன்தினம் கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டமாக கொழும்பு நகரில் 15000 சோற்றுப் பொதிகள் நேற்று முதல் விற்பனை செய்யப்பட்டன.

50 ரூபாவிற்கு சோற்றுப் பொதியை விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தியாளர் 8 ரூபாவினை இலாபமாக ஈட்ட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்ற மீண்டும் போராட்டம்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யுமாறு மீண்டும் போராட்டம் நடாத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்வதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, தற்போது நிறைவேற்று அதிகாரங்களை இரத்துச் செய்யாது, அதிகாரங்களில் திருத்தங்களை செய்ய முயற்சிக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகளின் அழுத் தங்களுக்கு ஜனாதிபதி அடி பணிந்துள்ளார்.

இதனால் நாட்டின் புத்திஜீவிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் அமைப்புக்கள் இணைந்து போராட்டம் நடத்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய நேரிட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட வேண்டும். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துவதில் தவறில்லை.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அதிகாரங்கள் செல்லக் கூடாது என்ற காரணத்தினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜாதிக ஹெல உறுமயவும் பிரதமர் மற்றும் நாடாளுமன்றிற்கு அதிகாரங்கள் செல்லக்கூடாது என கோரி வருகின்றனர் என்றார்.

# 8 அமைச்சர்களின் பொறுப்புக்களில் மாற்றம்

(கொழும்பு)

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட காரணத்தினால் எட்டு அமைச்சர்கள் தாங்கள் வகித்து வந்த சில அமைச்சு பொறுப்புக்களை இழக்க நேரிட்டுள்ளது.

ஏழு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக அர்ஜுன ரணதுங்க ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த ஒன்றுக்கும் மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கீழ் இயங்கி வந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஏ.எச்.எம்.பௌசிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் கீழ் இயங்கி வந்த தொழில் அமைச்சு எஸ்.பி நாவின்னவிற்கு வழங்கப்பட்டுள்ளது.


அமைச்சர் கபீர் ஹாசீமின் கீழ் இயங்கி வந்த உயர் கல்வி அமைச்சு சரத் அமுனுகமவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கரு ஜயசூரியவின் கீழ் இயங்கி வந்த உள்ளூராட்சிமன்ற அமைச்சு ஜனக பண்டார தென்னக்கோனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர் கயந்த கருணா திலக்கவின் கீழ் இயங்கி வந்த நாடாளுமன்ற விவகார அமைச்சு மகிந்த யாப்பா அபேகுணவர்தனவிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் கீழ் இயங்கி வந்த விமான சேவைகள் அமைச்சு ரெஜினோல்ட் குரேவிற்கும் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் கீழ் இயங்கி வந்த வடிகாலமைப்பு அமைச்சு விஜித விஜயமுனி சொய்சாவிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவின் கீழ் இயங்கி வந்த மீனபிடித்துறை அமைச்சு மஹிந்த அமரவீரவிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

**(09).** தரப்பட்ட உருக்களை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




32. இவ் உருக்களில் உணவுக்குப் பயன்படும் பொருட்கள் அடங்கிய விடை யாது?
(1). B,C,D (2). A,C,I
(3). C,D,F

33. விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய விடை யாது?
(1). B,E,G (2). A,C,H
(3). G,H,I

34. ஊர்வன அடங்கிய விடை யாது?
(1). H,I,G (2). A,D,E
(3). D,F,H

## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

**(01).** 1. மின்சாரம் தாக்குதல், மரத்திலிருந்து விழுதல், வெடிக்கும் பொருட்கள், பிராணிகள் தாக்குதல், நீரில் மூழ்குதல் 2. வாகனங்களில் மோதுண்டு காயம் அல்லது இறப்பு ஏற்படலாம், பாதையில் குழி அல்லது கல்லில் மோதி விழுதல், பாம்பு தீண்டுதல் 3. விளையாட்டுக்களில் ஈடுபடும் போது, பாடசாலை படிகளில் வழுக்கி விழுதல், மைதானத்திலுள்ள சிறுகல்லில் தடுக்கி விழுதல் 4. படிகளில் ஏறும் போது கவனமாக ஏறுதல், மைதானத்தில் இருக்கும் சிறிய கற்களை அப்புறப்படுத்தல், பாடசாலை தளபாடங்கள் பலமாக இருப்பதை பார்த்து அமருதல் 5. குப்பிவிளக்கு, சிமினிவிளக்குகளை போன்றவை தவறுதலாக விழுந்து தீப்பற்றும் போது உடலில் தீக்காயங்கள் ஏற்படும், அடுப்புகள், வாயுஅடுப்புக்களில் தீ விபத்துக்கள் ஏற்படாதவாறு அவதானமாக பாவித்தல் 6. முட்டுதல், விராண்டுதல், கடித்தல், பாய்தல் 7. முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி **(02).** 8. மூடிவிடல் 9. வடிகால்களை 10. குழிகளை 11. மற்றவர்களுக்கு 12. வலதுபுறமாகச் **(03).** 13.1 14.3 15.1 16.2 17.3 18.3 19.1 20.4 21.4 22.1 **(04).** 23. சரி 24. சரி 25. பிழை 26. பிழை 27. சரி **(05).** 28. குளோரின் 29. உப்பு 30. தக்கை 31. இரும்புஆணி 32. பருத்திப்பஞ்சு **(06).** 33. உடல் ஆரோக்கியமாக இருக்கும் 34. குளிக்கின்ற நீர் தொட்டிக்கு செல்லுதல் கிணற்றுக்கு அருகே மலசலகூடங்கள் இருத்தல் 35. கொதித்தாறிய நீரை பருகுதல், கிணற்றுக்கு அருகே மலசலகூடத்தை கட்டாது விடல் 36. கிணறு, குழாய்க்கிணறு, குளம் 37. மிதக்கும் பொருட்களில் பாரமான பொருளைக் கட்டிவிட்டால் மிதக்கும் பொருள் அமிழும் **(07).** 38. கரைகின்றது 39. பீலியில் 40. ஆற்றில் 41. சாக்கைப் 42. நிறம் **(08).** 43.2 44.3 45.4 46.1 47.1 48.2 49.1 50.2 51.1 52.4 **(09).** 53. வாகனம் நிறுத்துமிடம் 54. வலது பக்கம் திரும்பு 55. இடதுபக்கம் திரும்பு 56. ஒருவழிப்பாதை 57. முன்னால் ஒளிச்சமிக்ஞை விளக்கு 58. லொறி செல்லத்தடை 59. ஒலி எழுப்பத்தடை 60. வாகனம் நிறுத்தத்தடை **(10).** 61. சரி 62. சரி 63. பிழை 64. சரி 65. சரி **(11).** 66. பயணத்தை நிறுத்து 67. பயணத்தை ஆரம்பி 68. வலதுபுறமாக நடத்தல் 69. பயணத்துக்கு ஆரம்பமாகு 70. பாதையைக் கடத்தல் **(12).** 71. வலது புறமாக செல்ல வேண்டும் 72. பொருட்களை கொண்டு செல்லல், விரைவான காரியங்கள் நடைபெறல் 73. வாகனங்களால் வெளிவிடப்படும் புகை சுற்றாடலை மாசுபடுத்தும், வாகனவிபத்துக்களால் உயிர் ஆபத்துக்கள் கூட ஏற்படலாம், வாகனங்களில் செல்லும் போது ஏற்படும் தூசு துணிக்கைகள் சூழலில் படிதல் 74. மஞ்சள் கோட்டால் கடக்கவேண்டும், இருபுறமும் பார்த்து திரும்ப வேண்டும் **(13).** 75. அம்புலன்ஸ் வண்டியில் 76. விபத்துக்கள் 77. தூசுகள் 78. மாசடைகின்றது 79. சரியான

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015**

பகுதி - II
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(01).** பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. தேநீர்க்கறையை அகற்றப் பொருத்தமானது எது?
(1). நீர் (2). நீர், சவர்க்காரம் (3). மண்ணெண்ணெய்

02. இலங்கைப்போக்குவரத்துச் சபை பேருந்தில் ஆகக்குறைந்த கட்டணம் எது?
(1). ரூபா 5.00 (2). ரூபா 6.00 (3). ரூபா 10.00

**(02).** பின்வரும் சம்பவத்தை எழுவாய் பயனிலையுடன் நான்கு சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து ஆக்கபூர்வமாக எழுதுக.


மத்திய மலைநாட்டை நோக்கி பாடசாலை மாணவர்களின் சுற்றுலாப்பேருந்து வண்டி நகர்ந்து செல்கின்றது. மாணவர்கள் பேருந்தின் யன்னற் கண்ணாடி மூலம் வெளி அழகைப் பார்த்து இரசித்த வண்ணம் செல்கிறார்கள். அவர்கள் மகிழ்வாக ஆடிப்பாடிச் சென்று கொண்டிருக்கும் போது திடீரென ..................

03. ....................................................................................................
04. ....................................................................................................
05. ....................................................................................................
06. ....................................................................................................
07. ....................................................................................................
08. ....................................................................................................

**(03).** நீர் ஒரு ஊதுபத்தி தொழிற்சாலை வைத்திருக்கின்றீர் என்று கருதி அதற்கான ஒரு சிறிய விளம்பரம் ஒன்றை வடிவமைத்துக் காட்டுங்கள். (வேறு தாளில் வடிவமைக்கவும்)


**(04).** கீழே தரப்பட்டுள்ள 09ஆம், 10ஆம் வினாக்களில் எல்லாக்கருத்துக்களுடனும் மிகப்பொருத்தமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


09. எல்லோரும் பயன்படுத்துவது, முதலாம் வகை நெம்புகோல், தேய்ந்துபோகக்கூடியது எது?




1. பென்சில் 2. கணிப்பொறி 3. கத்தரிக்கோல்


10. போக்குவரத்துச்சாதனம், மனிதசக்தி, வெளிநாட்டு உற்பத்தி



(1)



(2)


(3)

11.ஒளி, சூடு, இயற்கை


(1)


(2)


(3)

**(05).12ஆம்,13ஆம் வினாக்களிலுள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழ் கோடிடுக.**

12. (1).தண்ணீர், வெந்நீர், உவர்நீர், நீர்
(2).பயறு, உழுந்து, சோயா, கௌப்பி
(3).வெண்டி, கத்தரி, தக்காளி, மிளகாய்

13. (1).ஆடு, மாடு, நாய், பூனை
(2).நிறம், வெள்ளை, பச்சை, சிவப்பு
(3).றோசா, மல்லிகை, ஐந்தூரியம், செவ்வந்தி

**(06).தரப்பட்ட தொடர்பு எண்களுக்குப் பதிலாக குறியீடுகள் காட்டப்பட்டுள்ளன. எல்லா உருக்களும் 10இற்கு குறைவான எண் பெறுமானம் கொண்டவை. அவ் எண் பெறுமானத்தை அறிந்து 14ஆம்,15ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

14.தரப்பட்ட உருக்களை அவற்றின் பெறுமானத்திற்கேற்ப நிரைப்படுத்த வரும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

☆ + ☆ = △
△ - ⊡ = ◯
⊡ x ⊡ = ☆

(1) ⊡ ☆ ◯ △ (2) △ ◯ ☆ ⊡ (3) △ ⊡ ☆ ◯

15.சரியான தொடர்பைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

(1) ⊡ - ☆ = ⊡ + ⊡
(2) △ + ⊡ = ◯ + ☆
(3) ☆ ◯ = ☆ △

**(07).16ஆம்,17ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட சொற்கள் இரண்டிற்கும் உள்ள தொடர்பை அவதானித்து அடுத்துவரும் சொல்லுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**


16.உணவு - இரப்பை எனின், எரிபொருள் -
(1).பெற்றோல் (2).குழாய் (3).தாங்கி


17.மாதுளை - முத்து எனின், நெல் -
(1).பருப்பு (2).மணி (3).வித்து


**(08).பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் நான்கு உருக்கள் தரப்பட்டுள்ளன. அதில் 3 ஏதோ ஒரு வகையில் ஒத்தவை. வித்தியாசமான உருவின் கீழ்க்கோடிடுக.**

18.


(1).


(2).


(3).


(4).



**(07).விலைப்பட்டியலை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| சீனி | 500g | 32.00 |
| மா | 3kg | 204.00 |
| கடலை | 750g | 66.00 |
| வெங்காயம் | 1kg | 60.00 |
| மண்ணெண்ணை | 1L | 48.00 |
| பால் | 2L | 64.00 |

19.250g கடலையின் விலை என்ன?
(1).44 (2).32 (3).22

20.500g மாவின் விலை என்ன?
(1).68 (2).34 (3).62

21.1/2L மண்ணெண்ணையினதும், 1/2L பாலினதும் விலை என்ன?
(1).56 (2).68 (3).32

22.1kg வெங்காயத்தினதும், 500g கடலையினதும் விலை என்ன?
(1).114 (2).100 (3).104

**(08).பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

23.எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் தாவர இலை எது?
(1).இலுப்பை (2).கறுவா (3).வேம்பு

24.இலைகளைப் பொருத்தி தனது வதிவிடத்தை அமைத்துக் கொள்ளும் பிராணி எது?
(1).கொசு (2).முசுறு (3).கறையான்

25.குமார் அல்லும் பகலும் உழைத்தான். இதில் உள்ள அல்லும் பகலும் என்பது
(1).அடுக்குமொழி (2).இரட்டைக்கிளவி (3).இணைமொழி

26.சிவப்பு நிறத்துடன் மஞ்சள் நிறத்தை கலக்கும் போது கிடைக்கும் நிறம் எது?
(1).செம்மஞ்சள் (2).ஊதா (3).கறுப்பு

27.உடலின் சமநிலையைப் பேணக்கூடிய விளையாட்டு எது?
(1).அஞ்சல்ஓட்டம் (2).நீளம்பாய்தல் (3).செம்போட்டப் போட்டி

28.கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன
A - வாய்க்கால் முழுவதும் நீர் நிரம்பியிருந்தது
B - ஊரெல்லாம் டெங்கு நோய் பரவியது
C - இடி மின்னலுடன் மழை பெய்தது
D - வாய்க்கால் நீரில் நுளம்பு பெருகியது
கூறப்பட்ட சம்பவத்தை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது?
(1).C,A,D,B (2).A,B,C,D (3).D,C,B,A


29.கீழே தரப்பட்டுள்ள சம்பவங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது?
A இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றாள்.
B மாலா சித்திரப் போட்டிக்குத் தெரிவானாள்.
C ஆசிரியரின் வழிகாட்டலில் வரையத் தொடங்கினாள்
D அவளை எல்லோரும் பாராட்டினர்.
E தொடர்ந்து விடா முயற்சியோடு வரைந்தாள்.
(1).A,B,C,D,E (2).B,D,E,A,C (3).B,C,E,A,D

30.பிள்ளைகள் பொது இடங்களில் நடமாடும் பொழுது பின்பற்றக் கூடாதது எது?
(1).சூழலைத் துப்பரவாகப் பேணுதல்
(2).பரீட்சயமற்ற புதியபொருட்களை தூக்க முற்படல்
(3).எல்லோரையும் நம்பி ஏமாறுதல்
(4).தனது உடல், உடைமைகளைக் கவனித்துக்கொள்ளல்

31.ஆமை எதிரிகளிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள
(1).உடலின் பருமனைக் கூட்டும் (2).சிறிய ஒலிகளையும் கேட்கும்
(3).கண்களை மூடிக்கொள்ளும் (4).ஓட்டினுள் புகுந்துகொள்ளும்

# புதிய பாதையை நோக்கிப் பயணிக்க சுதந்திரமான சிந்தனையில் ஒன்றிணைவோம்

## கே. வி. குகேந்திரன் தெரிவிப்பு



புதிய தலைமைத்துவத்தை உள்வாங்கி தூரநோக்குள்ள நவீனத்தவமான அரசியல் வியூகங்களை தேர்ந்தெடுத்து மக்களது மனங்களில் உண்மைத்தனமான விடயங்களை எடுத்துச்சொல்லி கடந்தகால வடுக்களையும் எமது இனம் விட்டுவந்த தவறுகளையும் தூக்கியெறிந்து புதிய பாதையை நோக்கிய தமிழ் மக்களது அரசியற் பயணத்திற்கு சுதந்திரமான பேச்சுரிமையுடன் நேர்மையான சிந்தனையுள்ள ஒரு களத்தை உருவாக்கிக்கொள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அத்தகைய ஒரு உண்மைத் தனமான அரசியலையே நீண்ட காலமாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களுக்காக செய்துவருகின்றார் – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை தொகுதி கட்சியின் செயற்பாட்டாளர்கள் சந்திப்பு கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நடைபெற்றது. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சிறப்பு அதிதியாக கலந்த கொண்டு சமகால அரசியல் தொடர்பாக செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போது உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் -

ஒவ்வொருவரது செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கும் மக்களை நேர்வழிகளில் திசைதிருப்புவதற்கும் வழிகாட்டியாக இருப்பதும் அந்த பிரதேசங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஊடகங்களின் பொறுப்பாகவே இருக்கவேண்டும்.

ஆனால் வடபுலத்தில் எத்தகைய சேவைகளை செய்தாலும் அத்தகைய செயற்பாடுகளை எல்லாம் மறைத்து தேவையற்ற விடயங்களை மக்களுக்கு திணித்துவருவதையே இங்குள் சில ஊடகங்கள் மேற்கொள்கின்றன. இதன் வெளிப்பாடுகள்தான் இன்றுவரை எமது இனத்தின் உரிமைகள் மறுக்கப் பட்டு வருகின்றமைக்கு காரணம்.

வடக்கிற்கான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையானது இலங்கை – இந்திய நாடுகளின் உறவு நிலைகளை வளர்ப்பதற்கான செயற்பாடு மட்டுமாகவே பார்க்கப்பட வேண்டும். தமிழரது வாழ்வியலை புதிய அரசு ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்துவிடும் என்று குடாநாட்டில் மார்தட்டித்திரியும் கூட்டத்தினர் மக்களுக்கு தொடர்ந்தும் அவல வாழ்வைத்தான் நீட்டிக்கொண்டு செல்கின்றனர்.

கிடைக்கப்பெறுவதை பெற்றுக்கொண்டு தேவையான மிகுதியையும் படிப்படியாக இணக்கமான முறையில் பெற்றுக்கொள்வதுதான் எமது செயலாளர் நாயகத்தின் நிலைப்பாடு. அதற்காகத்தான் இதுவரை மத்திய அரசுடன் எமக்கு மக்கள் தந்த ஆணையைக் கொண்டு இணக்கமான உறவின் மூலம் பல்வேறுபட்ட சேவைகளைச் செய்து வந்துள்ளோம்.

இதில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன்,உதவி தவிசாளர் அல்பேட்,முன்னாள் யாழ் மாநாகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோருடன் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கோவில் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் 14.2 கிலோமீற்றர் வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கோணாவில் சந்தியிலிருந்து அக்கராயன் பிள்ளையார் கோவில வரையான 6.6 கிலோ மீற்றர் வீதியும் அக்கராயன் மருத்துவ மனை சந்தியிலிருந்து அணைக்கட்டு வழியான வீதி கரும்புத்தோட்டம் பிள்ளையார் கோவில் வரையான 7.6கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

427 மில்லியன் ரூபா செலவில் இவ்வீதி புனரமைப்புகள் இடம்பெறவுள்ளன.

கோணாவிலிலிருந்து அக்கராயன பிள்ளையார் கோவில் வரை யான வீதிக்கிடையில் அமைந் துள்ள முக்கியமான சேதமடைந்து காணப்படும் யூனியன்குளம் பாலமும் புனரமைப்பதற்கான முயற்சிகளை வீதி அபிவிருத்தித்திணைக் களம் மேற்கொண்டுள்ளது. (160)

## பாலம் உடைந்துள்ளதால் போக்குவரத்துக்கு சிரமம்



கிளிநொச்சி கோணாவில் யூனியன்குளம் கிராமமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கடந்த ஐந்தாண்டுகளாக மூன்று கிலோ மீற்றருக்கு மேலான தூரத்தினைக் கடந்தே பேருந்துகளில் கிளிநொச்சி நகரத்திற்குப் பயணிக்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது. இடப்பெயர்வுகளுக்கு முன்னர் கிளிநொச்சி நகரிலிருந்து புறப்படும் பேருந்து புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், யூனியன்குளம் அக்கராயன் பிள்ளையார் கோவில் சந்தி வழியாக முழங்காவில் நோக்கி பயணிக்கும். ஆனால் இடப்பெயர்வு, மீள்குடியேற்றத்தின் பின்னர் யூனியன்குளம் கோணாவில் கிழக்கு மக்கள் நீண்டதூரம் நடந்தே பேருந்துகளில் பயணிக்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது.

யூனியன்குளம் பாலமுடைந்திருப்பதன் காரணமாகவே போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.மேற்படி வீதியினை வீதி அபிவிருத்தித் திணைக் களம் புனரமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாக மேற்படி கிராமத்திற்கான போக்குவரத்து நெருக்கடிகள் நீங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. (160)

## நாவலரின் பெருமையை காக்கவே பாடசாலைகளில் நாவலர் சிலை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டில் சுப்பர் சம்பந்தர் போன்ற சமயக்குரவர்களும் நாயன்மார்களும் தோன்றி சைவத்தை அழிய விடாது பாதுகாத்தது போன்று இலங்கையில் ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்திலே தோன்றி சைவத்தையும் தமிழையும் காத்துவந்தார். அதனால் தான் நாவலரின் பெருமையை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து போற்ற வேண்டுமென்பதற்காகவே பாடசாலைகளில் ஆறுமுகநாவலர் சிலைகளை நிறுவி வருகிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலய்த்தில் நாவ்லர் சிலையை திரைநீக்கம் செய்து திறந்து வைத்து உரைநிகழ்த்திய நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணை ஆனந்தன் குறிப்பிட்டார்.

கலலூரி அதிபர் செ.இளங்கோ தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற நாவலர் சிலை திறப்பு விழாவில் கருணை ஆனந்தன் தொடர்ந்து பேசுகையில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால் அறிவுறு நிலையிலிருந்த சைவதைக் காப்பாற்றி சைவத்தின் காவலனாக நாவலர் விளங்கினார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் இருந்து யாழ்ப்பாணம் வரை பல்வேறு பாடசாலைகளிலும் நாவலருக்குச் சிலை நிறுவி வருகிறோம். நாவலருக்குச் சிலை வைத் தால் மட்டும் போதாது தினமும் தியான வழிபாடுகள் செய்வ தோடு நாவலர் குருபூசையைப் பாடசாலைகள் கொண்டாட வேண்டும்.

நாவலரின் பணியை மாணவர்கள் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் வித்தியாலய அதிபர் செ.இளங்கோ உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

## பிரதேச சபைக் கூட்டம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி கரவெட்டி மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தின் போது மாதாந்த சபைக்கூட்டத்தில் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்களுக்கு நீதிமன்றத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உப தலைவர் சந்தசுருபன் கொண்டு வந்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (18)

## முரசின் இன்றைய பலன்

(24.03.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 10 ஆம் திகதி.
சித்தம் யோகம் / சதுர்த்தி திதி
பரணி நட்சத்திரம் மு.ப. 07.32 வரை. பின் கார்த்திகை
இராகு காலம் 03.16 - 04.46 வரை. சுபநேரம் 10.46 -12.16 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: விளையாட்டு மற்றும் கலைத் துறையினர் கௌரவம் பெறுதல்

**ரிஷபம்**: இடமாற்றம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டதால் மகிழ்ச்சி

**மிதுனம்**: புதிய தொடர்புகள் பொருத்தப் படும் செய்தி கிட்டுதல்

**கடகம்**: மாமன்மாருடன் நல்லுறவு பேணியதால் அதிர்ஷ்டம் உண்டாதல்

**சிம்மம்**: கடன் அடைக்க மேலும் கடன்பெறும் நிலைக்குத் தள்ளப்படல்

**மீனம்**: நிலுவை நலனைமுன்னிட்டு சேமிப்பில் நாட்டம் கொள்ளல்

**கன்னி**: புதிய ஒப்பந்தம் கையெழுத்திட நாள் கோள் நட்சத்திரம் பார்த்தல்

**கும்பம்**: எதிர்கால நலனை முன்னிட்டு சேமிப்பில் நாட்டம் கொள்ளல்

**மகரம்**: நீதிமன்ற முடிவு சாதகமான பதிலைத்தரும் நம்பிக்கை பிறத்தல்

**தனுசு**: கிரகபாவம் அதிகரித்துக் காணப்படுவதினால் வரனைத் தேடுவதில் அலைச்சல் தக்க வைத்தல்

**விருச்சிகம்**: பொருட்கள் கொள்வனவில் நம்பகத்தைக் கைவிட வேண்டாம்

**துலாம்**: உதவி செய்தபின் கைவிட்ட நண்பரை நினைத்து மனத் துக்கமடைதல்

# சர்ச்சைக்குரிய "நேர்முகம்"

# போர்மூளும் அபாய நிலை

## வடகொரியா எச்சரிக்கை

(சியோல்)

"சர்ச்சைக்குரிய "நேர்முகம்" திரைப்பட டி.வி.டி.,க் களை பலூனில் பறக்க விட் டால், போர் மூளும்" என, தென் கொரியாவிற்கு, வடகொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்-ஐ தீர்த்துக்கட்ட, இரு பத்தி ரிகையாளர்கள் முயற்சிப்பது தான் இன்டர்வியூ கதை.

இதனால் ஆத்திரமடைந்த வடகொரியா, படத்தை வெளியி டக் கூடாது என, எச்சரித்தது. இத னால், அமெரிக்காவில் மிகக் குறைந்த திரையரங்குகளில் இப்படம் வெளியானது.

இந்நிலையில், பாக் சங் ஹக் என்ற சமூக ஆர்வலர், 1 இலட்சம நேர்முகம் பட டி.வி.டி.,க் களை, பலூன் மூலம், தென்கொ ரிய எல்லையில் இருந்து, வட கொரியா நோக்கி பறக்க விடப் போவதாக அறிவித்துள்ளார்.

"பலூன்களுடன், 5 இலட்சம் துண்டுப் பிரசுரங்களும், வட கொரியாவில் விழும்" என்று தெரிவித்துள்ளார். தென்கொரிய போர் கப்பலை, வடகொரியா மூழ கடித்த ஐந்தாவது ஆண்டு தினம், நாளைமறுதினம் கடைபிடிக் கப்படுகிறது. அன்றே பலூன்க ளும் பறக்க விடப்படும் என, தெரிகிறது.

இந்நிலையில், "பலூன்கள் எல்லை தாண்டினால் சுட்டு வீழ்த தப்படும்" என, அறிவித்துள்ள வட கொரியா, "ஆத்திரமூட்டும் அரசி யல் மூலம், தென்கொரியா போருக்கு இழுக்கிறது" என, குற்றஞ்சாட்டி உள்ளது.

இதனால் வட, தென்கொரிய எல்லைப் பகுதியில் போர் பதற் றம் ஏற்பட்டுள்ளது. எல்லையோர மக்களை, பாதுகாப்பான பகுதிக ளுக்கு செல்லுமாறு, தென்கொரியா அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, கருத்து சுதந் திரம் என்ற பெயரில், அப்பாவி மக்களை அல்லாட வைக்கும், பாக் சங் ஹக்கின் செயலை, சமூக ஆர்வலர்கள் கண்டித்துள் ளனர். தற்போது, தலைமறை வாக உள்ள ஹக், "திட்டமிட்ட படி பலூன்களை பறக்க விடு வார் என, அவரது ஆதரவாளர் கள் தெரிவித்துள்ளனர்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். இன் கொலை பட்டியல் 100 அமெரிக்க இராணுவத்தினர் குறி

அமெரிக்காவின் இணையத்தள கட்டமைப்புக்குள் அத்துமீறி நுழைந்து தரவுகளை திரட்டியதாக ஐ.எஸ்.ஐ.எஸ். இணையதளம் கூறுகின்றது.

இஸ்லாமிய அரசு ஆயுதக்குழு இணையத்தில் வெளியிட்ட கொலைப் பட்டியலில் உள்ள அமெரிக்கப் படையினர் 100 பேருடன் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தொடர்புகொண்டு வருகின்றனர்.

இஸ்லாமிய அரசு ஆயுதக்குழுவினால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற இணையத்தளம் ஒன்றில், கொலைசெய்யப்படவுள்ள தாக பட்டியலிடப்பட்டுள்ள அமெரிக்கப் படையினர் 100 பேருடன் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தொடர்புகொண்டு வருகின்றனர்.

இராக்கிலும் சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழுவுக்கு எதிரான வான் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டி தாம் பட்டியலிட்டுள்ளவர்களை தங்களின் அனுதாபிகள் கொலைசெய்ய வேண்டும் என்று அந்த இணையத்தள குறிப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்க இணையத்தள தரவுக் கட்டமைப்புக்குள் ஊடுருவி நுழைந்து குறித்த படையதிகாரிகளின் பெயர்களையும் படங்களை யும் முகவரிகளையும் தாங்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ். இணையதளம் கூறுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரித்து வருவதாக அமெரிக்கா வின் பாதுகாப்புத்துறையான பெண்டகன் தெரிவித்துள்ளது.

ஆனால், தங்களின் இணையத்தளம் ஹாக்கிங் மூலம் அத்துமீறி ஊடுருவப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.

பெரும்பாலான தரவுகள் பொது ஆவணங்களிலும் ஊடகச் செய்திகளிலும் இருந்து பெறப்பட்டிருக்கக்கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் இங்கிலாந்து மருத்துவ மாணவர்கள்

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்களை பணயக் கைதிகளாக பிடித்துக்கொண்டு அவர்களை கொடூரமாக கொலை செய்து வருகிறார்கள். இந்த தீவிரவாத இயக் கத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் இணைந்து வருகிறார் கள். குறிப்பாக இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்தவர்கள் மட்டும் 600 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ள தாக அந்நாட்டு உள்துறை தெரிவித்து உள்ளது. பணயக் கைதிகளை தலையை துண்டித்து கொலை செய்யும் வீடியோ காட்சிகளில் தோன்றும் தீவிரவாதி ஜான் என்பவரும் இங்கிலாந்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இங்கிலாந்தை சேர்ந்த 9 மருத்துவக்கல்லூரி மாணவர்கள் சிரியா சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடாத்தும வைத்தியசாலைகளில் பணிபுரிந்து வருவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. 20 வயதுக்கு உட்பட்ட இந்த மாணவர்களில் 4 பேர் பெண்கள். இதனை அறிந்த மாணவர்களின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்து உள்ளனர். இந்த தகவலை இங்கிலாந்து நாட்டு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

# குர்ஆனை எரித்ததாக குற்றம்சாட்டி இளம் பெண் அடித்துக்கொலை

## ஆப்கானிஸ்தானில் சம்பவம்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் குர்ஆனை எரித்ததாக குற்றம் சாட்டி இளம்பெண் ஒரு வர் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

காபூலைச் சேர்ந்த 27 வயது பெண் பர்குந்தா. கடந்த 19ஆம் திகதி காபூலின் மையப் பகு தியில் அமைந்துள்ள ஷா-டோ ஷாம்சிரா மசூதிக்குச் சென்றார். மசூதி வளாகத்தில் இவர் புனித நூலான குரானின் சில பக்கங் களை எரித்ததாக சிலர் கோஷ மிட்டனர்.

இந்தத் தகவல் தீயாகப் பரவி ஒரு சில நிமிடங்களில் ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் மசூதி வளாகத்தில் கூடிவிட்டனர். அங் கிருந்த சில பொலிஸார், பாது காவலர்கள் மசூதியின் வாயிற் கதவுகளை மூடி பர்குந்தாவை காப்பாற்ற முயன்றனர். ஆனால் நூற்றுக்கணக்கானோர் சுவரில் ஏறி குதித்து மசூதி வளா கத்துக்குள் புகுந்த னர்.

என்ன நடந்தது என்பது குறித்து எதுவுமே விசாரிக் காமல் அந்தப் பெண்ணை தரை யோடு தரையாக இழுத்து வந்து காட்டுமிராண்டித் தனமாக தாக்கினர். சிலர் காலால் எட்டி உதைத்தனர், கற் களை வீசியெறிந் தனர், கம்புகளால் சரமாரியாக அடித் தனர்.

இரத்த வெள்ளத்தில் மயக் கமடைந்த அந்தப் பெண் தலை குப்புற தரையில் விழுந்தார். ஆனால் அதன்பின்னரும் ஆத் திரம் அடங்காத சிலர் அந்தப் பெண்ணின் உடல் மீது ஏறி நின்று குதித்தனர். அப்போதே அவரது உயிர் பிரிந்துவிட்டது. ஆனால் அதன் பின்னரும் அந்தப் பெண் ணின் உடலை கொலைவெறி கும் பல் தாக்கிக் கொண்டே இருந்தது.

பின்னர் காபூல் ஆற்றங்க ரைக்கு உடலை எடுத்துச் சென்று தீ வைத்து கொளுத் தினர். இதை ஆயிரக்கணக் கானோர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர். நீண்ட நேரத்துக்குப் பிறகு பொலிஸாரும் தீயணைப் புப் படையினரும் வந்து பாதி எரிந்த நிலையில் பர்குந்தாவின் உடலை மீட்டனர்.

# நாடாளுமன்ற வளாகத்தில் பயங்கர தீ




(புதுடில்லி)

டில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம மதியம் திடீர தீ விபத்து ஏற்பட்டது. தீ கொழுந்து விட்டு எரிந்தது தீயணைப்பு வீரர்கள் 10 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் விரைந்தனர். அருகில் உள்ள கடைக் காரர்கள் தெரிவித்த தகவலின்படி தீயணைப்பு வீரர்கள் உடனடியாக வந்து தீயை அணைத்தனர். தற்போது தீ கட்டுக்குள் வந்துள்ளதாக தீயணைப்பு வீரர்கள் தெரிவித்தனர். தீயை அணைக்கும் கடும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். தீ பிடித்ததற்கான காரணம் ஏதும் அறியப்படவில்லை.

குறித்த வளாகத்தில் உள்ள இரயில்பவன் அருகே உள்ள துணை மின் நிலையத்தில் இருந்து இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக முதல் கட்ட தகவல் தெரிவிக்கிறது. ஏ.சி., பிளாண்டில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ பிடித்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# நிபுணர் குழுவின் அறிக்கை உண்மையா? பல முனைகளில் கிளம்புகிறது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் ஏற்பட்ட பாதிப்புக்களை கண்டறிவதற்காக மாகாண சபையால் நியமிக்கப்பட்ட சட்ட நிபுணர் குழுவினர் அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்கு பல முனைகளிலிருந்தும் கண்டனங்கள் கிளம்பியுள்ளன.

குடாநாட்டின் குடிதண்ணீரில் ஒயில் கலப்பது தொடர்பாக நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையில் நம்பகத்தன்மை இல்லை என்றும் அதிலிருக்கும் தெளிவின்மையை கண்டித்தும் ஒயில் கலப்பால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒன்றியம் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியதுடன், அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.

குடிதண்ணீரில் ஒயில் சேர்தலால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியத்தின் சார்பில் அந்த அமைப்பின் ஆலோசகர் மருத்துவர் சிவசங்கர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பை நடாத்தினார்.

இதில் பின்வரும் விடயங்களை அவர் முன்வைத்தார். அந்த விபரங்கள் வருமாறு,

கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக வெளிவராமலிருந்த 'நீரில் ஒயில் 'கலந்த' பிரச்சினையை வெளிக்கொண்டு வந்து பொறுப்புடன் செயற்பட்டு வரும் அமைப்பு என்ற அடிப்படையில் 20.03.2015 அன்று விசேட செயலணியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை சார்பாக எம்மக்களால் கருத்துக்களும் சந்தேகங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒயில் மற்றும் ஆபத்தான மாசுக்கள் இல்லை எனின் முதலில் மட்டற்ற மகிழ்ச்சியடைவது இப் பிரதேச மக்களாகிய நாங்கள் தான். எனினும் பிரதேசத்தில் தற்போதும் ஒயில் படை கண்ணுக்கு புலப்படுகின்றமையால் மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் நியாயமானதாகும்.

மக்கள் பயன்படுத்தும் நீரில் ஒயில் இல்லை எனக்கூறும் நிபுணர் குழு அந்நீரை மக்கள் தங்களது தேவைக்காக பயன்படுத்த முடியுமா? அதில் ஒயில் மற்றும் கிறிஸ் என்பவற்றின் அளவு நியமத்தினை விட குறைவாக உள்ளதா என்பதையும் உறுதிபட தெளிவுபடுத்துவதோடு நீரினை மக்கள் பயன்படுத்த முடியுமா அல்லது பயன்படுத்த முடியாதா என பொறுப்புக் கூறுபவர்கள் திடமாக அறிவிக்கவேண்டும்

மக்களது அபிப்பிராயப்படி நிலத்தினுள் ஒயில் கலப்பதற்கு காரணமாக இருக்கும் மின்சார நிலைய வளாகத்தில் இருந்து வடக்கு நோக்கிய நீரோட்டப் பாதையில் அதிகளவான தாக்கம் காணப்பட்டது.

தற்போது ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் நிலையத்தினை சுற்றி வட்டவடிவில் அமைந்துள்ளதால் மாதிரிகளின் பிரதிபலிப்பிற்கான நிகழ்தகவு மிகவும் குறைவாக இருக்கக் கூடும்.

மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசத்தில் தற்போதும் ஒயில் படை கண்ணுக்கு புலப்படும் அதேநேரத்தில் இவ்வாறான அறிக்கைகள் மக்கள் மத்தியில் அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினது உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையின்படி கடந்த 5 வருடங்களுக்கு மேலாக ஒயில் கலந்துள்ளமை தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவை தற்போது திடீரென மறைந்தமை மக்கள் மத்தியில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான, அறிக்கை முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்பட்டு மக்களுக்கு சம்பந்தப்பட்டவர்களால் சரியான முறையில் அறிக்கையிடப்பட வேண்டும்.

அன்றேல் தற்போது வழங்கப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகம் சரியான முறையில் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் மக்களது கடந்தகால அனுபவ அறிவின் அடிப்படையில் ஏற்கனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் ஆய்வு செய்யப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட கிணறுகளில் 80 வீதமான முடிவுகள் ஒயில் கலந்துள்ளமையை உறுதிப்படுத்தியிருந்தது.

ஆனால் தற்போது 40 கிணறுகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நீர் மாசுபடவில்லை என அறிவிக்கத் துடிக்கும் தரப்பினரிடம் மக்கள் பின்வரும் வினாக்களை தொடுக்கின்றனர்.

1. சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்களும் தங்களுடைய குடிநீர் மற்றும் அனைத்து நீர் தேவைகளுக்கும் பிரதேச கிணறுகளை எவ்வித பயமுமின்றி பயன்படுத்தலாமா?

2. நாம் பாதிக்கப்பட்ட வேளை அக்கறையின்றி இருந்தவர்கள் 40 மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு முடிவினை வெளியிடுவதன் அவசரம் என்ன?

3. முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்படாது அறிக்கையிடுவதன் நோக்கம் என்ன?

4. இவர்களின் முடிவின் அடிப்படையில் எங்களது கிணறுகளை குடிநீர் தேவைக்கு பயன்படுத்த முடியுமா?

5. உயிராபத்துடைய இவ்விடயம் தொடர்பில் முற்றுமுழுதாக உறுதிப்படுத்தாத கிணற்றுநீரை பயன்படுத்துவதால் எதிர்காலத்தில் வரும் விளைவுகளுக்கு இவர்கள் பொறுப்புக் கூறுவார்களா?

6. துறைசார்ந்த நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களை உள்ளடக்கிய நிபுணர் குழு மூலம் அவசரப்பட்ட ரீதியில் அறிக்கை வெளியிட்டதன் மூலம் நிபுணர் குழு பலிக்கடாவாக்கப்படுகிறதா?

7. வெளிப்படைத் தன்மையில்லாது மேற்கொள்ளப்பட்ட ஆய்வினது வினைத்திறன் தொடர்பில் மக்களுக்கு திருப்தியற்ற நிலை காணப்படுகின்றது.

8. இப்பிரச்சினைக்கு காரணம் எனக் கருதப்படும் மின்சார நிலைய வளாகத்தில் மண் மாதிரிகள் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளவில்லை.

9. மத்திய அரசுடன் தொடர்பினை ஏற்படுத்தி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிக்கு இவ்வாறான உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் இடையூறாக இருக்கும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக இதற்காக அமைக்கப்பட்ட விசேட செயலணியானது திறந்த பதிலை மக்களுக்கு உடன்டியாக தெரியப்படுத்தாதுவிடின் மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும்.

## மாநகர...

வைக்கப்பட்டது.

குறித்த கடைக்கு சீல் வைக்கப்பட்டமையினால், யாழ்.மாநகர சபையின் மேற்பார்வையாளருக்கும் கடை உரிமையாளர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கடைகள் அனைத்தும் மூடப்பட்டு, பின்னர் பொலிஸார் தலையிட்டு, ஆர்ப்பாட்டத்தினை கட்டுப்படுத்தியதுடன். இரு தரப்பினரிடையேயும் சமரசத்தினை ஏற்படுத்தி கடைகளை மீண்டும் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிலையில், யாழ்.மாநகர சபையின் சுகாதார ஊழியர் சங்க தலைவருடன், தகராறு இடம்பெற்றதுடன்,யாழ் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் அவமரியாதை செய்ததாக சுகாதார ஊழியர்கள் கடும் எதிர்ப்பினை தெரிவித்ததுடன், நேற்று பெரிய கடையில் அமைந்துள்ள புடவைக் கடைகளுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம் மாநகர சபையின் சுகாதார ஊழியர் சங்க தலைவரிடம் மன்னிப்பு கோர வேண்டுமென்றும், பொருட்கள் சேதம் ஏற்படுத்தியதால், தமக்கு 5 இலட்சம் ரூபா பணமும் தர வேண்டுமென்று கோரிக்கை முன் வைத்தனர். (25)

## ரணிலுடன்...

கூட இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. வடக்கிலிருந்து இராணுவ வெளியேற்றம் மற்றும் உயர்பாதுகாப்பு வலய விடுதலை தொடர்பாக இருவருமே பரஸ்பரம் கருத்து மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (இ)

## மகிந்த...

ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அனுரகுமார திஸாநாயக்க, மக்கள் விரும்பும் பிரதிநிதிகள் ஆட்சியில் பங்கேற்கும் வகையில் நூறு நாட்கள் நிறைவில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வது அவசியம் எனவும் வலியுத்தியுள்ளார்.

## காணி...

இன்னமும் 1100 ஏக்கர் காணி மக்களிடம் கையளிக்கவுள்ளோம். எதிர்வரும் ஏப்ரல் மாத முடிவுக்குள் அவற்றை மீள மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ,ப)

## படிப்படியாகவே...

கூட நாம் எமது வேலைகளைத் தொடர்ந்தால் தான் அவற்றையும் நிவர்த்தி செய்து நிறைவேற்றமுடியும்.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காகவே நாங்கள் இந்த புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம். நாங்கள் உங்கள் பகுதிகளுக்கு வரும்போது இங்குள்ள குறைபாடுகள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து உங்கள் அரசியல் தலைவர்கள் எங்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தி வருகின்றனர். நாடாளுமன்றத்திலும் உங்கள் பிரச்சினைகள் பற்றி அரசியல் தலைவர்கள் எடுத்துரைக்கிறார்கள். எனவே தமிழ் மக்களாகிய உங்களுக்கு பாரதூரமான பல பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் இதன் வாயிலாக அறிந்துவைத்துள்ளோம். நீங்கள் உங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் தேர்தலில் எனக்கு வாக்களித்தீர்கள். எனவே நான் தெட்டத் தெளிவாக உங்களுக்கு ஒன்றைக் கூறுகிறேன். உங்களுக்கு இருக்கக்கூடிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சிக்காலத்தின்போது தீர்வு காணுவோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்காலத்திலும் நாம் உங்கள் மத்தியில் மேடைகளில் பேசுவதற்காக வரமாட்டோம். பதிலாக கிராமங்கள்தோறும் சென்று உங்கள் பிரச்சினைகள் குறித்து உங்களிடமே நேரடியாகப் பேசி தீர்வு காண்பதே எமது அடுத்த நடவடிக்கைகளாக இருக்கும். புதிய அரசாங்கம் என்ற வகையிலேயே மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முக்கிய பல திட்டங்களை நாம் முடுக்கிவைத்துள்ளோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சகோதரத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே மிக மிக முக்கியமானது. இதற்காக நாம் சந்தேகத்தையும் பீதியையும் இல்லாமல் நீக்கிவிடவேண்டும்.

தமிழ் மக்களது பிரச்சினைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு அவற்றுக்குத் தீர்வு வழங்குவதன் மூலம்தான் உங்களுடைய அந்த சந்தேகத்தையும் பீதியையும் இல்லாமல் செய்யமுடியும். நாம் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை கடந்த மாதம் உருவாக்கி செயற்படுத்தி வருகிறோம். இதில் முக்கியமான பணிகளை முன்னெடுத்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தருபவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இருக்கிறார். உங்களது பிரச்சினைகளை நாங்கள் மிகவும் அவதானமாகச் செவிமடுத்துவருகிறோம்.

எனவே படிப்படியாக உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்போம். உங்களுடைய மனங்களில் இருக்கும் சந்தேகம், பயம், பீதி எல்லாவற்றையும் தீர்க்கக்கூடிய விதத்திலே நாம் உங்கள் பிரச்சினைகளை அவதானித்து வருகிறோம். இன்று இந்த நிகழ்வு என்பது எமது ஆரம்பமே தவிர இது ஒரு முடிவு என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது.

இதனை முடிவுறுத்த எமக்கு இன்னும் சில காலம் தேவைப்படுகிறது. இன்று (நேற்று) நாங்கள் உங்கள் காணிகளை கையளிப்பது மட்டுமல்லாமல், இங்கே அழிந்துபோன கட்டுமானங்களை எல்லாம் மீளமைத்துத்தருவதும் எமது நோக்கமாகவுள்ளது.

இந்தப்பிரதேசத்துக்கு வந்து இந்தக் காணிகளைப் பார்த்தபோது எமது உள்ளத்திலே மிகவும் மனவேதனை ஏற்பட்டுள்ளது. நீங்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கவில்லை. இந்தப்பகுதியை பார்த்தால் அது நன்றாகத் தெரியும். மாத்தளை,கண்டி, நுவரெலியா பிரதேசங்கள் போல அல்ல இந்தப் பிரதேசங்கள். இங்குள்ளவர்கள் குடிதண்ணீருக்கு என்ன செய்கிறார்கள் என்று நான் வடக்கு முதலமைச்சரிடம் கேட்டேன். அப்போதுதான் மக்கள் குடிதண்ணீருக்காக பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரியவந்தது. காணிகளை விடுவிப்பது மட்டுமன்றி, உங்களுக்கு வாழக்கூய சூழலையும் சுற்றத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய அவசியம் எமக்கு இருக்கிறது. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ அதே போன்று நாங்களும் உங்கள் மீது கவனம் செலுத்துவோம். ஒரு பிள்ளை அழும்போது அது எதற்காக அழுகிறது என்று பார்க்கவேண்டும்.

அதேபோன்று வடபகுதி மக்களது பிரச்சினைகளையும் நாம் கருத்தில் கொண்டு எதிர்வரும் காலத்தில் வடபகுதியில் பெரும் மாற்றத்தை கொண்டுவரவிருக்கிறோம். அதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் நாம் ஏற்படுத்திக்கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் வடக்கு மாகாண சபைக்கும் நாம் பூரண வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கத் தயாராக இருக்கிறோம். வடபகுதி மீனவர் பிரச்சினை பற்றியும் நாம் கருத்திலெடுத்துள்ளோம். மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண விசேட வேலைத்திட்டத்தையும் நாம் ஆரம்பிப்போம் என்றார்.

## செயலக...

தந்த காணாமற் போன உறவினர்கள் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக காலை 10.30 மணியளவில் இருந்து சுமார் ஒரு மணித்தியாலம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமற் போனோர் மற்றும் இராணுவத்தினரால் கடத்தப்பட்டவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, எங்கே எமது பிள்ளைகள், காணாமற் போன உறவுகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளை கைகளில் தாங்கியவாறு பெற்றோர்கள் கதறி அழுது தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்தனர்.

நோய்களுடனும், வாழ்வாதாரமின்றியும் தாம் வாழ்வதாகவும், காணாமற் போன தமது பிள்ளைகளை மீட்டுத் தந்தால், தமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும் தாம் நின்மதியான வாழ்க்கை வாழ முடியுமென்றும் பெற்றோர்கள் கதறி அழுதனர்.

வட, கிழக்கு மாகாணங்களில் 8 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டமானது, காணாமற் போன குடும்பங்களின் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் நடைபெற்றதுடன், ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் யாழ். மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கருணாகரனிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றிணையும் கையளித்தனர்.

இந்த மகஜர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைக்கப்படுமென்று நிர்வாக உத்தியோகத்தர் வாக்குறுதி அளித்தார். (25)

# மத்திய வகுப்பு திட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



மத்தியவகுப்புத்திட்டக் காணிகளில் வாழ்வதனால் வீட்டுத்திட்டம் உட்பட எதுவித அடிப்படை வசதிகளையும் பெறமுடியாது ஓலைக்குடிசைகளில் துன்பங்களை அனுபவித்த வண்ணம் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று சுமார் 2042 பேருக்கான காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நாலாயிரம் வரையான மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன நேற்று சுமார் இரண்டாயிரத்தி நாற்பத்தி இரண்டு பேருக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு அடுத்துவரும் சில வாரங்களில் மேலும் இரண்டாயிரம் வரையானோருக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை இந்த மாவட்டத்தில் இன்னும் பல காணிப் பிணக்குகள் காணப்படுகின்றன ஒரு காணிக்கு பலர் உரிமை கோருகின்ற நிலைமையும் காணபடுகின்றது அது மட்டுமன்றி நாளாந்தம் மக்கள் காணிப்பிணக்குகள் காரணமாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சென்றுவருவதையும் அவதானிக்கமுடிகின்றது இது தொடர்பான கோரிக்கைகளை மக்கள் பிரதிநிதிகளிடமும் மக்கள் முறையிட்டு வருகின்றனர். ஆகவே இந்த பிணக்குகளை நடமாடும் காணிக்கச்சேரிகளை வைத்துத்தான் தீர்க்க முடியும் என்ற நிலைமையில் மத்திய காணி அமைச்சின் உத்தியோகத்தர்கள் பல தீடவைகள் இந்த பிரதேசத்திற்கு வருகை தந்து உரிய திட்டங்களை செயற்படுத்தி பலபிணக்குகளுக்கு தீர்வு கண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை இன்னுமொரு முக்கிய விடையத்தையும் இங்கு சுட்டிக்காட விரும்புகின்றேன். அதாவது கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் சுமார் ஆயிரத்து முன்நூறு வரையான குடும்பங்கள் மத்திய வகுப்புத் திட்டக் காணிகளில் முப்பது வருடங்களுக்கு முன்னர் குடியேறி தொடர்ந்தும் அக்காணியிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இன்னும் அம்மக்கள் காணி அனுமதிப் பத்திரங்களைப் பெறமுடியாத ஒரு நெருக்கடி நிலைக்குள் வாழ்கின்றனர் அதுமட்டுமன்றி மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இந்த மாவட்டத்தில் அனைத்து மக்களும் பெற்ற வர்ய்ப்புகளை குறிப்பாக வீட்டுத்திட்டம் உட்பட ஏனைய அனைத்து வசதிகளையும் பெறமுடியாத நிலையில் கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக ஓலைக்குடிசைகளில் பல துன்பங்களை அனுபவித்தவண்ணம் இம்மக்கள் வாழ்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நாம் மூன்று வருடங்களாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம். குறிப்பாக மாவட்ட செயலாளர் அலுவலகம், பிரதேச செயலகம், மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் ஏனைய துறைசார்ந்த அமைச்சுக்கள்வரை என பல வழிகளிலும் இந்த விடயம் தொடர்பாக விளக்கமளித்தும் அம்மக்களின் நியாயத்தன்மைகளை வெளிப்படுத்தியும் செயற்பட்டு வருகின்றோம். எனவே. அந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு அம்மக்களின் வாழ்விலும் ஒளியேற்றவேண்டும் என்றார்.

கரைச்சி பிரதேச செயலகத்தில் மாவட்ட அரசஅதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற. இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன் காணி ஆணையாளர் நாயகம் ராஜபக்ஸ வடமாகாண காணி ஆணையாளர் தயானந்தாஇ மேலதிக காணி ஆணையாள மகேஸ்வரன் உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலன் பிரதேச செயலாளர்களான நாகேஸ்வரன்இஜெயராணிஇ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொன்சேகாவுக்கு புதியரக கார்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனத்தின் இலக்கமானது இதுவரை இலங்கை வீதிகளில் பயணித்த வாகனங்களில் காணப்படாத அடையாளத்துடன் கூடிய இலக்கமாக அது அமைந்துள்ளது.

வாகனத்தின் முன் பகுதியில் 5 நட்சத்திரங்களும் பின் பகுதியில் 5 நட்சத்திரங்களும் காணப்படுகின்றன.

பீல்ட் மார்ஷல் ஒருவரின் வாகனம் செல்கிறது என்பதை ஏனையோர் அறிந்து கொள்ளும் வகையில் விசேட அடையாளமாக இந்த நட்சத்திரங்கள் அதில் பொறிக்கப்பட்டுள்ளன.

எஸ். 400 என்ற பென்ஸ் கார் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது ஐப்ரைட் ரக வாகனமாகும். வாகனத்தின் இலக்கம் யு.ஏ.555 ஆகும். காரின் விலை சுமார் 34 லட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அல்வாய் கிழக்கில் பட்டப் பகலில் கொள்ளை

(அல்வாய்)

அல்வாய் கிழக்கில் நேற்றுப் பகல் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், அல்வாய் கிழக்கில் ஆசிரியர்களான கணவரும் மனைவியும் நேற்று பாடசாலைக்குச் சென்ற சமயம் இவர்களது வீட்டுக் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் 14 பவுண் நகைகளையும் 46 ஆயிரம் ரூபா பணத்தினையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக உரியவர்களால் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. மோப்ப நாய் சகிதம் வருகை தந்த பொலிஸார் தேடுதல்களை மேற்கொண்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (18)

# கட்டார் மன்னர் இன்று கொழும்புக்கு

(கொழும்பு)

கட்டார் மன்னர் இன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கட்டார் நாட்டின் மன்னர் தமீமீ பின் ஹமட் அல் தானியின் கொழும்பு விஜயத்தை முன்னிட்டு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இருந்து கொழும்பு வரையான பல வீதிகளில் வாகன போக்குவரத்துகள் கட்டுப்படுத்தப்படும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டார் மன்னார் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதனை முன்னிட்டு, கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயில், பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்தை, பொரல்லை, டி.எஸ். சந்தி, ஹெர்ட்ன் பிளேஸ், லோட்டஸ் வீதிக்கு எதிரில் உள்ள வீதி, லிபர்ட்டி சுற்றுவட்டம், சென் மைக்கல் சுற்றுவட்டம், கொள்ளுப்பிட்டியில் இருந்து காலி முகத்திடல் வரையான காலி வீதி, என்.எஸ்.ஏ. சுற்றுவட்டம் என்பன இன்று மதியம் 1.30 முதல் 2.30 வரை மூடப்படும் என பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.

அதேவேளை கட்டார் மன்னர், விமான நிலையத்திற்கு செல்வதற்காக அதே வீதிகளில் பிற்பகல் 3.45 முதல் 4.45 வரை வாகன போக்குவரத்து கட்டுப்படுத்தப்படும். இலங்கை வரும் கட்டார் மன்னர் தானி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இருத்தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

# மோடிக்கு அவசர கடிதம் தமிழக மீனவர்களை மீட்க

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 54 பேரையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார். இது குறித்து தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் எழுதியுள்ள கடிதத்தில், பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பாக் நீரிணை அருகே தமிழக மீனவர்கள் அமைதியாக மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள 54 மீனவர்களையும் அவர்களின் 10 படகுகளையும் விடுவிக்க நிச்சயமாக பிரதமரின் நேரடி தலையீடு அவசியமானது.

# உள்ளக விசாரணை வேண்டாம்; கிளிநொச்சியில் போராட்டம்



(கிளிநொச்சி)

காணாமல் போன உறவுகளால் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. ஏமாற்ற விசாரணை வேண்டாம், ஐ.நா. அனுசரணையிலான விசாரணையே வேண்டும் என கவன ஈர்ப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் வைரவர் ஆலய முன்றலில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பமான குறித்த அமைதிப் பேரணி ஏ9 வீதியூடாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினை வந்தடைந்தது. அங்கு வருகை தந்திருந்த உறவுகள் ஜனாதிபதிக்கு கிடைக்கும் வகையில் அ.அதிபரிடம் மனு ஒன்றினை கையளித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அ.அதிபர் சத்தியசீலன். காணாமல் போன உறவுகளின் பெற்றோரினால் ஜனாதிபதிக்கு கிடைக்கும் வகையில் கையளிக்கப்பட்ட மகஜரை பெற்று கொண்டார். பெற்றுக்கொண்ட மே.அ அதிபர் குறித்த மகஜரை மாவட்ட அ.அதிபர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதாக மக்களிற்கு வாக்கழித்ததை தொடர்ந்து வருகை தந்திருந்த மக்கள் கலைந்து சென்றனர். இக்கவன ஈர்ப்பு போராட்டத்தில் மாவட்டத்தின் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (160, 29)

# வவுனியாவிலும் நேற்று போராட்டம்

(வவுனியா)

காணாமல் போனோர் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாண சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் போனோரின் உறவுகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது காணாமல் போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை எனவும், சர்வதேச விசாரணையே தமக்கு தேவையெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டம், பின்னர் மன்னார் வீதி வழியாக யாழ். வீதியை வந்தடைந்து வவுனியா மாவட்ட செயலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்திருந்தது.

இதன்போது கொலைகாரர்களிடமே நியாயமா?, ஏமாற்றும் உள்ளக விசாரணை வேண்டாம் ஐ.நா. அனுசரணையிலான விசாரணைக் குழுவே வேண்டும், ஐ.நாவே இனப்பிரச்சனையில் தலையிடு, உள்ளக விசாரணை சிறிலங்கா அரசின் ஏமாற்று நாடகம் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டடிருந்தவர்கள் தாங்கியிருந்தனர்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.